விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 10 திங்கட்கிழமை (23.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 035

## நான் வெற்றி பெறுவதற்காக
# ஐ.தே.கவிற்கு எதிரான எவருடனும் இணைவேன்!
### மாகாண முதலமைச்சர்களிடம் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் நலனை முன்னிலைப்படுத்தி எமது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான எந்தவொரு தரப்பினருடனும் தாம் இணைந்து செயற்படத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்.)

## பனையுடன் மோதி பேருந்து விபத்து
### 4 பேர் காயம்

(மல்லாவி)

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையப்பிரிவிலுள்ள முலலைத்தீவு - புளியங்குளம் வீதி பகுதியில் கோடாலிக் கல்லு வீதி வளைவில் திரும்பிய போது வேகக கட்டுப்பாட்டை இழந்த இலங்கை போக்குவரத்து சபையின் முல்லை

24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளி ரி.ஐ.டியினரால் கைது

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி- திருவையாறு பிரதேசத்தில், முன்னாள் போராளி ஒருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட கராளசிங்கம் குலேந்திரன் என்பரே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காப்புறுதி நிறுவனமொன்றில்

23ஆம் பக்கம் பார்க்க....

## இளைஞர்களிடையே மோதல்; 5 வீடுகள் மீது தாக்குதல்
### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் இளைஞர்களுக்கு இடையே இடம்பெற்ற கருத்து முரண்பாடானது பாரிய மோதல் கலவரமாக மாறியதில் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவமானது நேற்றைய தினம் மாலை கொக்குவில் மேற்கு கேணியடி பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்றைய தினம் மாலை இளைஞர்கள் சிலர் ஒன்றாக சேர்ந்து இருந்த வேளையில், அவர்களுக்கு இடையே கருத்து முரண்பாடு ஏற்ப

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜல்லிக்கட்டு; இருவர் பலி; பலர் படுகாயம்!

(சென்னை)

தமிழ்நாடு புதுக்கோட்டையில் நேற்று இடம்பெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

## நயினாதீவு, எழுவைதீவில் நேற்று
## உவர்நீரை நன்னீராக்கும் இயந்திர தொகுதி திறப்பு



24ஆம் பக்கம் பார்க்க....

## உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து உலகக் கூட்டமைப்பு உருவாகட்டும்
### காலம் கனிந்துள்ளது என முதலமைச்சர் சி.வி உரை

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதுமுள்ள தமிழ்பேசும் மக்கள் ஒன்றிணைந்து தமிழ் அகில உலகக் கூட்டமைப்பொன்று உருவாக வேண்டும் என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், அவ்அமைப்பை உருவாக்கும் காலம் தற்போது கனிந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம எனும் தொனிப்பொருளில் வடமாகாண உழவர் பெருவிழா நேற்றைய தினம் யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இயற்கையைப் போற்றுவதற்கும்,

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜி.எஸ்.பி சலுகை இன்மையால் நாட்டுக்கு நட்டம் எதுவுமில்லை
### நிபந்தனைக்கு அடிபணியக்கூடாது - மகிந்த

(கொழும்பு)

அன்று ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கிடைக்காத காரணத்தினால் நாட்டுக்கு ஐந்து சதமேனும் நஷ்டம் ஏற்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் விசேட மாநாட்டில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளாத

23ஆம் பக்கம் பார்க்க....

## வான்பரப்பில் மர்மப்பொருள்

(கொழும்பு)

நாட்டின் வான்பரப்பில், நேற்று முன்தினமிரவு அடையாளம் தெரியாத பறக்கும் பொருளொன்று தென்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பொருள் வட்ட வடிவமாக இருந்ததாகவும் பிரகாசமாக ஒளிர்ந்ததாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழிலிருந்து இராணுவத்தை குறைக்க சந்தர்ப்பமில்லை!
### யாழ்.கட்டளைத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டு உள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை குறைக்கும் சந்தர்ப்பம் இனனும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை படிப்படியாக கையளித்து

23ஆம் பக்கம் பார்க்க....

## "இவர் இல்லாமல் தமிழருக்கு உணர்வு எப்படி வரும்?"



(சென்னை)

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மீதான தடையை நிரந்தரமாக நீக்கக் கோரும் போராட்டங்கள் மேலோங்கியுள்ள நிலையில், தமிழகத்தின்

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சினிமா பாடசாலை ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் கயந்த தகவல்

(கொழும்பு)

சினிமா பாடசாலையொன்று ஆரம்பிக்கப்படும் என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சினிமா துறைகக்கு 70 வருடங்கள் மற்றும் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 45 வருடங்கள் நிறைவு ஆகியவற்றை முன்னிட்டு இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன தரங்கணி சினிமா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் நாட்டில் அனைத்து சினிமா திரையரங்குகளும் டிஜிற்றல் மயப்படுத்தப்படும் என்று அமைசசர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பழைய திரைப்படங்களைப் பாதுகாப்பதற்கான விசேட பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி திரைப்பட விருது விழா பத்து வருடங்களுக்குப் பின்னர் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது நிலவும் சவால்களை இனங்கண்டு உள்நாட்டு சினிமாத்துறையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சினிமாத் துறையுடன் தொடர்புடைய அனைவரையும்



அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதற்காக முன்வைக்கப்படும் யோசனைகளைக் கருத்திற் கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-3)

# ட்ரம்பை வரவேற்ற மகிந்த

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள டொனால்ட் ட்ரம்பின் வெளிவிவகாரக் கொள்கையை வரவேற்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள நிலையில் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து, டுவிட்டரில் பதிவேற்றினார் மகிந்த ராஜபக்ஷ,

அந்தப் பதிவில், அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றமை குறித்து மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, ட்ரம்பின், தலையீடு செய்யாத வெளிவிவகாரக் கொள்கையை வரவேற்பதாகவும் தெரிவித்தார். (இ-3)

# ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டிச் சவாரி தடை செய்யப்பட வேண்டும்

## டக்ளஸ் எம்.பி கருத்து

மிருகவதை என்ற ரீதியில் ஜல்லிக்கட்டையும் வடக்கில் இடம்பெறும் மாட்டு வண்டி சவாரியையும் தடைசெய்ய வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான தன்னெழுச்சி போராட்டத்தை வரவேற்கிறேன். ஆனால் ஜல்லிக்கட்டு என்பதை மிருகவதை என்ற ரீதியில் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. பெரிய விடயம் என்பதற்காக அதை ஏற்றுக்கொள்வது சரியில்லை.

தமிழர் பண்பாட்டில் உடன்கட்டை ஏறுதல், சிறுவயது திருமணம் உள்ளது. ஆனால் அதை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோமா? இப்போது அவை நடைமுறையில் இல்லை. எனவே இதேபோன்று மிருகவதையான ஜல்லிக்கட்டையும் நாம் கைவிட வேண்டும்.

அத்துடன் வடக்கில் நடைபெறும் மாட்டு வண்டி சவாரியையும் மிருகவதை என நான் முன்பு தடைசெய்திருந்தேன். அதனையும் தடை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# மகிந்த, கோத்தவுக்கு தெரிந்தே லசந்த கொலை செய்யப்பட்டார்

## அமைச்சர் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு தெரிந்தே சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டார் என அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.


குறித்த லசந்த கொலை தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகள் குறித்து ஊடகங்களிடம் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். தொடரந்தும் அவர் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பில் எனக்குத் தெரிந்த எல்லா விடயங்களையும் கூறினேன்.

இவ்வாறு வாக்குமூலமொன்றை பெற்றுக் கொள்ள என்னை அழைத்தமைக்காக புலனாய்வுப் பிரிவுக்கு நன்றி கூறுகின்றேன்.

அத்துடன், லசந்த கொலை தொடர்பில் எனக்கு தொடர்பு உணடு என சில தரப்பினர் காலத்துக்கு காலம் கூறி வருகின்றனர். இந்த கருத்துக்கள் ராஜபக்ஷ குடும்பத்துக்கு தேவையான வகையிலேயே கூறப்படுகின்றது.

மேலும், அப்போதைய இராணுவத் தள



பதி என்ற ரீதியில் எனக்கு தெரிந்த விடயங்களை நான் கூறினேன் என சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-3)

# லஞ்சம் பெற்ற பி.எச்.ஐ கைது

(கொழும்பு)

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் நேற்று முன்தினம் கண்டியில் கைது செய்யப்பட்டுள்ளார்.


ஹோட்டல் ஒன்றுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக, ஹோட்டல் உரிமையாளரிடம் இருந்து 10 ஆயிரம் ரூபாய் இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரை கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் தம்பிநாதன்

**ஓய்வுபெற்ற லிகிதர் (தேர்தல் திணைக்களம், யாழ்ப்பாணம்)**



*யாழ்ப்பாணம் அச்செழுவை பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற லிகிதர் (தேர்தல் திணைக்களம், யாழ்ப்பாணம்) வைத்திலிங்கம் தம்பிநாதன் 19.01.2017 வியாழக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சுப்புலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலம்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் சுதா (கனடா), ஜெகதர்மினி (ஜெயந்தி), ராஜராஜன் (ஜேர்மனி), சற்குணராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலம்சென்றவர்களான ஞானசௌந்தரம், அமுதராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கௌரீசனின் (கனடா) மாமனாரும் சங்கவி, ஹரிஷ்னா ஆகியோரின் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை 24.01.2017 காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்
தொடர்பு: 021 205 8124

ஆவரங்கால்,
புத்தூர்.

(7587)

**கணிதம்**
தரம் 6 – 11 வரை
ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம்
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:- 077 421 2871
(7590)

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வெளியூர்களில் இருந்து வருபவர்களுக்கும் சுபகாரியங்கள் தங்கி நின்று செய்வதற்கும் சகல வீட்டு தளபாட வசதிகளுடன் கூடிய வீடு நாள், கிழமை அடிப்படையில் வாடகைக்குண்டு. (7591)
077 285 0753

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
திரு.
யோ. ஜெகஆனந்தம்




எமது பாடசாலை அதிபர்
திரு. யோ. ஜெகஆனந்தம்
அவர்கள் 11.01.2017 அன்று
யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு
விழாவில் முதுகலைமாணி
(M.E.D) பட்டம் பெற்றமையை
பாராட்டுவதோடு
அவர் மேலும் பல பட்டங்களைப்
பெற வேண்டும் என
வாழ்த்துகின்றோம்.
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
ஆசிரியர்கள்
(7586)

# பேச்சுவார்த்தை தோல்வி

# மகிந்த-மாகாண முதலமைச்சர்கள் சந்திப்பில் எந்தவித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை

## இரவில் விழுந்த குழியில் பகலில் விழத் தயாரில்லை



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் இருக்கும் மாகாண முதலமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பு எந்தவித இணக்கப்பாடும் இன்றி முடிவடைந்துள்ளது.**





இந்த சந்திப்பு கொழும்பிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முற்பகல் நடந்தது. எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்படி பிளவுபடாமல் போட்டியிடுவது என்பது உட்பட சில விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இங்கு கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி,

இரவில்விழுந்த குழியில்பகலில் விழ எவரும் தயாரில்லை எனவும் நாட்டை அழிக்கும் முடிவுகளுக்கு கையை உயர்த்தும் கட்சியை பற்றி எண்ணாது, நாட்டை பற்றி சிந்திக்குமாறு தலைவர்களிடம் கூறுங்கள் எனவும் கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் இந்த கருத்துக்கு மாகாண முதலமைச் சர்கள் பதில் எதனையும் கூறவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி நடந்தும் வரை கட்சியுடன் எந்த இணக்கப்பாட்டிற்கும்வர முடியாது எனவும் மகிந்த ராஜபக்ஷ தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதனால், எந்த இணக்கப்பாடுகளும் இன்றி பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்துள்ளதுடன் மீண்டும் சந்திப்பு நடைபெறுமா? என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை. (இ-3)

## மகிந்த - மைத்திரி இணைந்தால் ஐ.தே.கட்சிக்கு அதோ கதி- இசுறு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்து போட்டியிட்டால ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதோகெதிதான் என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன்மாகாண முதலமைச்சர்கள் நேற்றுக் காலை நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஆறு முதலமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தை நடத்தினோம். மகிழ்ச்சியாக இருந்தது. வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இரு குழுக்களிடையேயும் அரசியல் ரீதியிலான போராட்டம் உருவாகியிருந்ததை கண்டோம். நாம் சிறந்ததொரு ஆரம்பத்தை எடுத்தோம். அவர்களது தரப்பில் பொறுப்பு மிக்கதான பதிலொன்றை நாம் எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## கடலில் காணாமற் போன மூவரும் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கம்பளையிலுள்ள துன்கிந்த மகாவலி ஆற்றில், நேற்று முன்தினம் நீராடிக் கொண்டிருந்த போது காணாமற்போன மூன்று பேரின் சடலங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் குறித்த பகுதியில் நீராடிக்கொண்டிருந்த ஐந்து பேரில் மூவர் காணாமல் போயிருந்தனர். காணாமல் போன 13 வயதையுடைய மூவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். (இ-3)

## காணிப்பிரச்சினைகளைக் கவனமாக கையாளாவிட்டால் அரசியல்வாதிகளே முரண்பாட்டிற்கான காரணிகளாவர்

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் காணிப் பிரச்சினைகளை அரசியல்வாதிகளும், சம்பந்தப்பட்ட நிர்வாகிகளும் கவனமாக கையாளாவிட்டால் அவர்களே எதிர்காலத்தில் முரண்பாட்டிற்கான காரணிகளாக குற்றஞ்சாட்டப்படுவார்கள் என நல்லிணக்க செயற்பாட்டின் ஒருங்கிணைப்பிற்கான அமைப்பின் தலைவர் மொஹமட் மனாருதின் தெரிவித்தார்.

புதிய சட்டத்தின் மூலமாக காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால் நல்லிணக்கத்தை உருவாக்கலாம் என பொதுமக்கள்கருதுவதாகவும் அவர் தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்தில் உள்ள காணி பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று கொழும்பு பொறளையில் நடைபெற்றது.

காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலின் போதே, காணி பிரச்சினைகள் எதிர்காலத்தில் இனங்களுக்கிடையில் மேலும் முறுகலை ஏற்படுத்தும் செயற்பாடாக அமைந்துவிடும் என மொகமட் மனாருதின் தெரிவித்தார்.

சிறுபான்மையின மக்களின் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளையும் புதிய அரசியல் யாப்பின் ஊடாக பெற்றுக் கொடுக்காவிட்டால் நாட்டில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள் எவையும் வெற்றியளிக்காது என அம்பாறை மாவட்ட காணி உரிமைக்கான செயலணியின் இணைப்பாளர் நிகால் அகமட் தெரிவித்தார். (இ-3)

## அரசில் அங்கம் வகிக்கும் 25 பேர் கூட்டு எதிரணியுடன் இணைவர்

### ஜோன்ஸ்டன் எம்.பி. நம்பிக்கை


அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 25 பேர் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமான முறையில் நகர்ந்து வருவதாகவும் இவர்கள் கூடிய விரைவில் எதிர்க்கட்சியுடன் இணைய எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகி, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இணைந்து கொண்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மகிந்த அரசாங்கத்தில்வர்த்தகத்துறை அமைச்சராக பதவி வகித்தார்.

அமைச்சராக பதவி வகித்த காலத்தில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன் வழக்கு விசாரணைகளும் நடந்து வருகின்றன. (இ-3-7)

# பாகிஸ்தானை வீழ்த்தி தொடரை வென்றது ஆஸி



சிட்னியில் நடைபெற்ற 4-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ் தானை வீழ்த்தி அவுஸ்திரேலியா தொடரை 3-1 எனக் கைப்பற்றியுள் ளது.

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வரு கிறது.

முதல் மூன்று போட்டிகள் முடி வின் அடிப்படையில் அவுஸ்திரே லியா 2-1 என முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் 4-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா அணி முதலில் பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி கவாஜா, வோனர் ஆகியோர் தொட க்க வீரர்களாக களம் இறங்கினார் கள். கவாஜா 30 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார் அடுத்து வந்த ஸ்மித் 48 பந்தில் 49 ஓட்டங்கள் சேர்த்தார். ஆனால் வோனர் சிறப்பாக விளையாடி 119 பந்தில் 130 ஓட்டங்கள் குவித்தார்.

அதன்பின் வந்த ஹெட் 51 ஓட்டங்களும், மக்ஸ்வேல் 44 பந் தில் 78 ஓட்டங்களும் விளாச அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப் பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 353 ஓட்டங் கள் குவித்தது. பாகிஸ்தான் அணி யின் ஹசன் அலி சிறப்பாக பந்து வீசி ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தி னார்.


பின்னர் 354 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் பாகிஸ்தான் அணி களம் இறங்கியது. அந்த அணியின் கப்டன் அசார் அலி, ஷர்ஜீல் கான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். அசார் அலி 7 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தாலும் ஷர்ஜீல் கான் 74 ஓட்டங்களும், பாபர் ஆசம் 31 ஓட்டங்களும், மொகமது ஹபீஷ் 40 ஓட்டங்களும், சோயிப் மாலிக் 47 ஓட்டங்களும் எடுத்து அணிக்கு சற்று நம்பிக்கை ஊட்டினர்.

ஆனால், பின்னர் வந்த வீரர் கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற பாகிஸ்தான் அணி 43.5 ஓவரில் 267 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஆல் அவுட் ஆனது. இதனால் அவுஸ்திரே லியா 86 ஓட்டங்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்றது. அவுஸ்திரே லிய அணியின் ஆடம் சம்பா, ஹசில்வுட் ஆகியோர் தலா 3 விக் கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-1 எனக்கைப்பற்றி முன்னிலைப் பெற்றுள்ளது. 5-வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி 26-ந் திகதி அடிலெய்டில் நடைபெற வுள்ளது.

போட்டியின் ஆட்டநாயகராக டேவிட் வோனர் தெரிவானார். (க)

# நியூசிலாந்து - பங்களாதேஷ் 3-ம் நாள் ஆட்டம் மழையால் ரத்து



நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதும் 2-டெஸ்ட் போட்டியின் 3-வது நாள் ஆட்டம் மழையால் ரத்து செய்யப்பட்டது.

நியூசிலாந்து- பங்களாதேஷ் அணிகள் மோதும் 2-வது டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடை பெற்று வருகிறது.

பங்களாதேஷ் முதல் இன்னிங் சில் 289 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்சை விளை யாடிய நியூசிலாந்து

நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்ட நேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

நேற்று 3-வது நாள் ஆட்டம் நடை பெறுவதாக இருந்தது. மழை யால் நேற்றைய ஆட்டம் ஒரு பந்து கூட வீசப்படாமல் ரத்து செய்யப்பட் டது. (க)

# இந்தியாவின் வெள்ளையடிப்பை தகர்த்தெறிந்தது இங்கிலாந்து



கொல்கத்தாவில் நடந்த 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி யில் இங்கிலாந்து 5 ஓட்டங்களால் இந்தியாவை வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றது.

இந்தியா - இங்கிலாந்து அணி கள் மோதும் 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கொல்கத்தாவில் நேற்று நடைபெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. இதன் படி இங்கிலாந்து அணி முதலில் துடுப் பெடுத்தாடியது.

தொடக்கம் முதலே நிதானமாக விளையாடி வந்த இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டு க்கு 321 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

தொடக்க வீரர் ஜாசன் ராய் (65), பேர்ஸ்டவ் (56), பென் ஸ்டோக்ஸ் (57) ஆகியோர்கள் அரைசதம் அடித்தனர். அணித்தலைவர் மோர கன் 43 ஓட்டங்களும், கடைசி நேரத் தில் அதிரடி காட்டிய கிறிஸ் வோக்ஸ 34 ஓட்டங்களும் சேர்த்தனர்.

இந்திய அணிசார்பில் பாண்ட்யா 3 விக்கெட்டுகளையும், ஜடேஜா 2 விக் கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய இந்தியாவுக்கு தொடக்க வீரர்கள் ரஹானே (1), ராகுல் (11) ஏமாற்றினர்.

அடுத்து வந்த யுவராஜ் சிங், விராட் கோஹ்லி ஜோடி நம்பிக்கை அளித்தது. கோஹ்லி (55) அரை சதம் கடந்து ஆட்டமிழந்தார். அடுத்து யுவராஜ் சிங் 45 ஓட்டங்க ளில் வெளியேறினார்.

டோனி 25 ஓட்டங்கள் எடுத் தார். நிதான ஆட்டத்தை வெளிப் படுத்திய பாண்ட்யா (56), கெதார் ஜாதவ் அரைசதம் அடித்தனர். கடைசி வரை போராடிய கெதார் ஜாதவ் 90 ஓட்டங்கள் எடுத்தார்.

ஜடேஜா (10), அஸ்வின் (1) நிலைக்கவில்லை. வெற்றியை நெருங்கினாலும், 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணியால் 9 விக்கெட்டுக்கு 316 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் இங்கி லாந்து 5 ஓட்டங்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்றது.

இருப்பினும் 3 ஒருநாள் போட்டி கள் கொண்ட தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி உள்ளது.

போட்டியின் ஆட்டநாயகராக இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் தொடர் நாயகனாக இந்தியாவின் ஜாதவ் தெரிவானார். (க)



# மாஸ்டர்ஸ் பட்மிண்டன் சாய்னா நேவால் சம்பியன்




மலேசியா மாஸ்டர்ஸ் கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பட்மிண்டன் தொட ரில் தாய்லாந்து வீராங்கனையை வீழ்த்தி சாய்னா நேவால் சம்பியன் பட்டம் வென்றார்

உலக பட்மிண்டன் தரவரிசை யில் முன்னாள் நம்பர் வன் வீராங் கனையும், ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்றவருமான இந்தியா வின் முன்னணி வீராங்கனை சாய்னா நேவால் மலேசியா மாஸ் டர்ஸ் கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பட்மிண்டன் தொடரின் இறுதிப் போட டிக்கு முன்னேறினார்.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் தாய்லாந்தின் போர்ன்பவீ சோசுவாங்கை எதிர்கொண்டார். இதில் சாய்னாவிற்கு தாய்லாந்து வீராங்கனை கடும் சவாலாக விளங்கினார். என்றாலும் சாய்னா முதல் செட்டை 22-20 எனக்கைப் பற்றினார். 2-வது செட்டையும் 22-20 எனக்கைப்பற்றி இந்த வருடத் தின் முதல் கிராண்ட்பிரிக்ஸ் ஓபனை சாய்னா கைப்பற்றினார். இந்த வெற் றியை பெற சாய்னாவிற்கு 43 நிமிடங்களே தேவைப்பட்டது.

ரியோ ஒலிம்பிக் தொடருக்குப் பின காயத்தால் விளையாடாமல் இருந்த சாய்னாவிற்கு இந்த வெற்றி மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. சாய்னாவின் 23-வது சம்பியன் பட்டம் இதுவாகும். கடந்த ஆண்டு அவுஸ்திரேலிய ஓபனை வென்ற சாய்னா, அதன்பின் தற்போதுதான் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். (க)

# தென்னாபிரிக்காவில் வெற்றி கணக்கை தொடங்கியது இலங்கை



இலங்கை மற்றும் தென்னா பிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபது - 20 போட்டி யில் இலங்கை அணி 3 விக்கட்டு களால் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரி க்கா அணி முதலில் துடுப்பாடி 19.3 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணி சார்பாக பந்து வீச்சில் அறிமுகவீரரான சந்தகன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங் களுக்கு 4 விக்கட்டுகளையும் உதான 2.3 ஓவர்களில் 13 ஓட்டங் கள் கொடுத்து 3 விக்கட்டுகளை பெற்றுக்கொண்டனர்.


118 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கினை நோக்கி களமிறங்கிய இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களை தென்னாபிரிக்க அணி யின் பந்து வீச்சாளர்கள் ஆரம்ப முதலே ஆட்டம் காணவைத்தனர்.

நிதானமாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் மத்தியூஸ் 50 பந்துகளில் 54 ஓட்டங்கள் பெற்று இலங்கை அணியினை வெற்றி பாதைக்கு கொண்டு சென்றார்.

போட்டியின் ஆட்டநாயனாக மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார். மூன்று இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரினை 1-1 என இலங்கை அணி சமநிலை செய்து ள்ளது. (க)



# அரசு உடனே பதவி விலக வேண்டும் பெண் பெளத்த துறவி உணவு தவிர்ப்பு





அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, பெண் பெளத்த துறவி ஒருவர் கண்டி தலதா மாளிகைக்கு எதிரில் சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

பிக்குனி நேற்று அதிகாலை முதல் இந்த உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிக்குனியின் பெயர் விபரங்கள் வெளியாகவில்லை.

தனது போராட்டம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள பிக்குனி, தற்போதைய அரசாங்கம் விரும்பி ஆட்சியில் இருந்து விலகும் வரை உண்ணாநிலை போராட்டத்தை நிறுத்த மாட்டேன்.

அரசாங்கம் தான் எண்ணியபடி செயற்பட்டு வருகிறது. இந்த பூமியை நேசிக்கும் பெளத்தர் என்ற வகையில் சிங்கள இனம் அழிவை பொறுத்துக்கொள்ள முடியாது தான் இங்கு வந்து அமர்ந்துள்ளேன் எனக் கூறியுள்ளார்.

தான் காடுகளில் தவத்தில் ஈடுபட்டு வந்ததாகவும் இறுதியில் அரசாங்கத்திற்கு எதிரான இந்த சாகும் வரையான உண்ணா நிலைப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு அழிந்து விடும் என்று என் மனத்திற்கு தோன்றியது. இதனையடுத்து என்னால், தவம் செய்ய முடியவில்லை. நான் எவ்வளவோ முயன்றும் மனதை கட்டுப்படுத்தி தவத்தில் ஈடுபட முடியவில்லை. எனக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தற்போது எனது வழி மாறி யுள்ளது எனவும் பிக்குனி மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# இலங்கை முழுவதும் பெண் பாதயாத்திரை

இலங்கை முழுவதும் 1268 கிலோ மீற்றர் நடந்து செல்லும் முயற்சியில் பெண்ணொருவர் ஈடுபட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று ஹங்கம நகரத்தை கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 10ஆம் திகதி கதிர்காமம், கிரிவெஹேர என்ற் பிரதேசத்தில் இருந்து அவர் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

தேவிகா காசிவெட்டி என்ற பெண்ணே இவ்வாறு பயணத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவர் எதிர்வரும் மே மாதம் கிரிவேஹேர என்ற பகுதியில் தனது பயணத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளார்.

கதிர்காமம், மாத்தறை, களுத்துறை, கொழும்பு, சிலாபம், மன்னார் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு சென்று மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஊடாக கதிர்காமம், கிரிவேஹேர வரை கடல் வழியாக பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக குறித்த பெண் தெரிவித்துள்ளார். (இ-3)


## என்றும் நீங்கா நினைவுடன் வாழும்...



திருமதி உதயராணி
கோபாலகிருஷ்ணன்



கலாபூஷணம்
செல்லையா மெற்றாஸ்மயில்

பாசமலர்களின்
7ம் ஆண்டு நினைவஞ்சலி
திதி: 23.01.2017

ஆறு ஆண்டுகள்
கடந்தும் ஆறவில்லை
எமது மனத்தின் துயரம்
இவ்வுலக வாழ்வில்
எம்மை நல்வழி நடத்தி
நல்வாழ்வுக்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வங்களே!
நீங்கள் எம்மை விட்டுப்
பிரியாமல் எம்முடம் வாழ்கின்றீர்கள்
என்ற நம்பிக்கையுடன் நாம்
இன்னும் உயிர் வாழ்கின்றோம்.

பாசமிகு சகோதரர்களின்
ஆத்மசாந்திக்கு இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

18, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்,
தொ.பே.இல. 021 222 3586


# அரசியலில் இருந்து விலகும் முடிவைக் கைவிட்டார் விதுர

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்கப்போவதாக எடுத்திருந்த தீர்மானத்தை கைவிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.



தாம் அரசியல் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக சில தினங்களுக்கு முன்னர் அவர் அறிவித்திருந்தார். அந்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினரினால் ஹோரன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பு ஒன்று கூட்டப்பட்டது.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில், தற்போது நிலவும் அரசியல் முறைமை தொடர்பாக தாம் விரக்தி அடைந்திருப்பதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகப் போவதாகவும் குறிப்பிட்டார். இதற்கு கட்சி உறுப்பினர்களிடம் கருத்து கேட்கப்பட்ட போது அவர்கள் அதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். இதன்படி கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் வண்ணம் தமது தீர்மானத்தை கைவிடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகளை மாற்றக் கூடிய வகையில் அழுத்தம் கொடுக்கும் சக்தியொன்றை எதிர்காலத்தில் தோற்றுவிக்கவுள்ளதாகவும் விதுர விக்கிரமநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)


40 வருடங்களுக்கு மேலாக மக்களின்
நன்மதிப்பை வென்ற
"ரோயல் குளுக்கோஸ்"

PACKED BY: ROYAL INDUSTRIES,
Colombo-13 TP:- 077 727 7670

தற்போது
புதிய
வடிவில்!!




இழந்த சக்தியை உடனடியாக
மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
"ரோயல் குளுக்கோஸ்"
தொடர்புகளுக்கு

சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567


## இராசி பலன்

23.01.2017
(தை 10, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.29 மணிவரை
அனுசம் பிற்பகல் 3.12 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை
ஏகாதசி விரதம் வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி,பரணி | | |
| சூரி | | | ராகு |
| புத | சனி சந் | குரு | |

**மேடம்:** யோசித்து செயற்பட வேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வீண்விரயங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் குறையும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகம் உண்டு.

**மிதுனம்:** பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உற்சாகமாக பணிபுரியும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள் ,பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்,வியாபார நலனில் அக்கறை காட்டுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்:** பெற்றோர் வழியில் அனுகூலமுண்டு, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சுப காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், நீண்ட நாளைய பிரச்சினையொன்றில் திருப்பங்கள் ஏற்படலாம். புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள். புதிய பொறுப்புக்களுடன் பதவிகளும் வந்து சேரலாம். சேமிப்பு உயர்வடையும்.


**விருச்சிகம்:** வழிபாட்டில் பெருமை காண வேண்டிய நாள். ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள். நினைத்த காரியத்தை சாதித்துக்கொள்வீர்கள். போசன சுகமுண்டு.

**தனுசு:** சுற்றியிருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம். வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்:** பலருடைய அன்பிற்கு பாத்திரமாவீர்கள். பயணங்கள் கைக்கூடுவதற்கான வாய்ப்புண்டு. வியக்கும் செய்திகள் வந்து சேரலாம். கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** நண்பர்கள் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பர். வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள். தொழில் மேன்னையுண்டு.


**மீனம்:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீர் என சாதகமாகி விடும். நண்பர்களால் ஆதாயமுண்டு.




நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வு யாழ். பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் யாழ். பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# போலி நாணயத்தாள்களை பொலிஸில் ஒப்படைக்கவும்

## அச்சப்பட வேண்டாம் என்கிறார் அதிகாரி


(கரணவாய்)

போலி நாணயத்தாள்கள் பெருமளவில் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாக நம்பப்படும் நிலையில் இது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுமாறும் போலி நாணயத்தாள்கள் என இனம் கண்டால் அதனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கலாம் எனவும் அவ்வாறு ஒப்படைப்பவர்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என நெல்லியடி உதவிப் பொலிஸ் பரிசோதகர் கே.விமலவீர பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை வன்னிச்சை அம்மன் கோவிலடிப் பகுதியில் போலி நாணயத்தாள் அச்சிடும் வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டு போலி நாணயத்தாள்களும் அச்சிடப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சே.விமலவீர 3/44 113801 எனும் நாணயத்தாளினை பிரதியாக்கம் செய்து கள்ளநோட்டு அச்சடித்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இவ் இலக்கமுடைய நாணயத்தாள் தொடர்பில் கவனமாகஇருக்குமாறும்மேலும் வேறு தாள்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

போலி நாணயத் தாள்கள் என சந்தேகிக்கும் தாள்களை நெல்லியடிப் பொலிஸில் ஒப்படைக்க முடியும். ஒப்படைப்பவர்கள் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசானந்தன் மற்றும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த ஆகியோர் நெல்லியடிப்பொலிஸ் நிலையத்துக்கு சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். மேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றனவா? என கண்காணிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-60)




# போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட ஐவரும் மறியலில்

வடமராட்சிப்பகுதியில்போலி நாணயத்தாள் அச்சிட்டு புழக்கத்தில் விட்டதாக நெல்லியடிப்பொலிஸாரால்கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார். கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்றுநெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி ஐந்து சந்தேக நபர்களையும் மறுநாள் 21 ஆம் திகதி சனிக்கிழமை நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்திய போதே அவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து வல்வெட்டித்துறையில் கவனயீர்ப்பு




ஜல்லிக்கட்டிற்கு ஆதரவு தெரிவித்து வடமராட்சி வல்வெட்டித்துறையிலும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் கொட்டும் மழைக்கு மத்தியில் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பங்கேற்றியிருந்தார்.

இறுதியில் வல்வெட்டித்துறை கடலுக்குள் இறங்கி நின்று பதாகைகளை தாங்கியவாறு கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர். (இ-60)

## க.பொ.த. (உயர்தர) பரீட்சை பெறுபேறுகள்-2016

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

கணித விஞ்ஞானத்துறை

ச.கிரிஷாந்-2சிஎஸ்,
க.ருஷாந்தன்-2சிஎஸ்.

வர்த்தகத்துறை

ர.ஜானுசாந்-3ஏ, அ.கஜன்-2ஏபி, க.டிலக்ஷன்-ஏ2பி, க.சுஜிகரன்-ஏ2சி.

கலைத்துறை


ம.ஜெயகீர்த்தனா-2ஏபி,
கு.றொபிஷா-ஏபிசி.

# சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவரங்கம் 27-ம் திகதி

யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம் நடத்தும் சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவரங்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்குயாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பொதுக்கூட்டம்

வடமராட்சி வடக்கு, தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கௌரவிப்பும் இன்று காலை 9 மணிக்கு சங்க காரியாலயத்தில் சி.சுகிர்தன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்வார். (இ-60)



தனது நிதியொதுக்கீட்டின் கீழ் கைதடி, தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு 111 பிளாஸ்ரிக் கதிரைகளை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் அண்மையில் வழங்கிவைத்தார். கைதடி சரஸ்வதி முன்பள்ளியில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி பிளாஸ்ரிக் கதிரைகளை வடமாகாணசபை உறுப்பினர் சங்கத்தின் தலைவியிடம் கையளித்தார். நிகழ்வில் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் முழுமூச்சுடன் இயங்கிய அங்கத்தவர்களுக்கான பரிசில்களும் நிகழ்வில் வழங்கிவைக்கப்பட்டன.




யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் தரம் 1 கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

# அதிரடி முடிவுகளுக்கு தயாராகும் ஜனாதிபதி

## கொழும்பு அரசியலில் குழப்பம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் சில முக்கிய அரசியல் முடிவுகளை எடுக்க உள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட செயலகத்தில நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி எடுக்க உள்ள இந்த அரசியல் முடிவுகள் மக்களுக்கு பலன் தரக்கூடியதாக இருக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே அடுத்த சில தினங்களில் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் மத்தியில் அதிருப்தியை சம்பாதித்துள்ள அமைச்சர்கள் சிலர் தற்போது வகித்து வரும் பதவிகளை இழக்கக் கூடும் எனவும் தெரிய வருகிறது. (இ-3)

# புகையிரதம் மோதி இளைஞன் பலி!

பொலநறுவை பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். மனம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் புகையிரத வீதிக்கு அருகில் நின்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

# தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பு



(கொழும்பு)

கொட்டகலை - ஸ்டோனிகளிப் தோட்டத்தில் தோட்ட தொழிலாளர்கள் 100இற்கும் மேற்பட்டோர் அத்தோட்ட நர்வாகத்திற்கு எதிராக பணிப் பகிஷ்கரிப்பு செய்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்டோனிகிளிப் தோட்டத்தின் தொழிற்சாலைக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டமானது அத்தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வரும் தொழிலாளர்கள் நலம்பேணும்விதமாக தோட்ட நிர்வாகம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை எனவும் சுட்டிக்காட்டினர்.

அண்மையில் ஸ்டோனிகிளிப் தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் குளவக்கொட்டுக்கு இலக்காகி ஐவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந் நிலையில் இத்தோட்டப் பகுதியில் குளவிக் கொட்டுகளுக்கு இலக்காகி வரும் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் தோட்ட நிர்வாகம் எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அதேவேளை தேயிலை மலைகளில் காணப்படும் குளவிக்கூடுகளை அகற்றுவதற்கு இத்தோட்ட மக்கள் பலமுறை தோட்ட நிர்வாக அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஆவேசம் கொண்ட தொழிலாளர்கள்நேற்றுக் காலை தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன் தொழில் பணிப் பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

உடனடியாக தேயிலை தோட்ட மலைகளில் உள்ள குளவிக் கூடுகளை அகற்றுவதற்குத் தோட்ட நிர்வாகம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோரியும் இத்தோட்டத்தில் குளவிக் கொட்டு மற்றும் ஏனைய அனர்த்தங்கள் இடம்பெறும் நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சைகளை மேற்கொள்ள அம்புலன்ஸ் வண்டிகள் தயாராக இருக்க வேண்டும் என வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டகாரர்கள் தோட்ட நிர்வாகத்திற்குக் கோரிக்கை முன் வைத்துள்ளனர். (இ-3)

# பிரதமர் நாடு திரும்பியதும் அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)



வெளிநாட்டு விஜயத்தில் ஈடுபட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் அமைச்சரவையில் மாற்றங்கள் பல மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைக் காலமாக கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தி வரும் பல பிரபல அமைச்சர்களின் அமைச்சுக்கள் மாற்றப்படவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அமைச்சு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட முன்னர் ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலத்தில் அமைச்சர்கள் தங்களது சுய விருப்பப்படி தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்திற்கு நெருக்கடியாக அமைந்துள்ளதாகவும், அரசாங்கத்தின் உள் மட்டத்தில் இவர்கள் தொடர்பில் பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும் அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-3)

# முன்னாள் ஜனாதிபதி யாகியா நாட்டை விட்டு வெளியேறினார்

22 ஆண்டுகள் பதவியில் இருந்த காம்பியா ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறி கினியா சென்றார்.

ஆபிரிக்க நாடான காம்பியா இங்கிலாந்திடம் இருந்து 1965 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அதைத் தொடர்ந்து நடந்த சர்வாதிகார ஆட்சியாளரிடம் இருந்து 1994 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி பறிக்கப்பட்டது.

யாகியா ஜம்மே ஜனாதிபதியாக பதவி ஏற்றார். கடந்த 22 ஆண்டுகளாக அவர் பதவி வகித்தார். இவரது கொடூரமான ஆட்சிக்கு எதிராக மக்கள் திரண்டனர்.

அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி யாகியா ஜம்மே படுதோல்வி அடைந்தார். அத்மா பாரோ அமோக வெற்றி பெற்றார். ஆனால் அவரது வெற்றியை ஜனாதிபதி யாகியா ஏற்கவில்லை.மேலும் பதவி விலகவும் அவர் மறுத்துவிட்டார். எனவே மக்கள் போராட்டம் நடந்தது. இந்த நிலையல் அண்டை நாடான செனேகல் சென்ற அத்மா பாரோ அங்குள்ள காம்பியா நாட்டு தூதரகத்தில் ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

இதற்கிடையே மக்கள் போராட்டத்துக்கு பணிந்த யாகியா பதவியில் இருந்து விலகினார். மேலும் காம்பியாவில் இருந்து வெளியேறவும் சம்மதித்தார்.

அதை தொடர்ந்து அவர் அண்டை நாடான கினியாவுக்கு தனது மனைவியுடன் விமானத்தில் புறப்பட்டு சென்றார். செனேகல் நாட்டில் இருக்கும் புதிய ஜனாதிபதி அத்மா பாரோ விரைவில் காம்பியா திரும்புகிறார். (இ-3)

# நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு

# சு.க. நிலைப்பாட்டில் மாற்றம் இருக்காது

## ஐ.தே.க.தலைவர் நம்பிக்கை

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுவரை கூறவில்லை என்பதால், அது தொடர்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டிருக்காது என நம்புவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்து டாவோஸ் நகரில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை கிடைத்தாலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும், பிரித்தானியாவுடன் தனியான வர்த்தக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மேலும், பிரித்தானிய ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கவில்லை என்றால், நாம் இரு நாடுகளின் பொருளாதார விடயங்களில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இதனிடையே பொதுநலவாய நாடுகளில் வர்த்தக மற்றும் முதலீட்டை வலுப்படுத்துவது தொடர்பாக நியூசிலாந்துடன் இணைத்து பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதேவேளை கடந்த ஆட்சிக்காலத்தில் நடந்த மிகப் பெரிய ஊழல், மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க பயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரிகள் இல்லை என்பதால், அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில், சீன அபிவிருத்தித் திட்டத்திற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்களே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பிரதிபலனாக ராஜபக்ஷ ஆதரவாளர்கள் இடையில் பிளவு ஏற்பட ஆரம்பித்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார். (இ-3)

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தையா நாகமணி

**(ஓய்வுபெற்ற உடற்பயிற்சி உதவி கல்விப் பணிப்பாளர், முன்னாள் விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி)**



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகமணி அவர்கள் 21.01.2017 அன்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துமாணிக்கம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் வாசுதேவன் (கனடா), ஜெயந்தி (கனடா), ஸ்ரீபாஸ்கரன் (இந்தியா), இராஜ்குமார் (ஜேர்மனி), சுகந்தி (ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அமரர் நவக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகாம்பிகை, பாலசுந்தரம், உமா, சூரியகலா, அனுஜெயன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சனஜன், யாழினி, ஜெயந்திரா, ஷர்மி, ஸ்ரீலேகாஷாளினி, விசால், தனுஷன், தீர்த்தனன், ஆர்த்திகன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான கணபதிப்பிள்ளை, ஆறுமுகம், கதிரித்தம்பி, செல்லம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜசிங்கம், தயாபரசிங்கம், பராபரசிங்கம், பரயோகசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 25.01.2017 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**'ஈஸ்வரி வாசம்'**
**சண்டிலிப்பாய் வடக்கு,**
**சண்டிலிப்பாய்.** (7585)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 224 0058**

# முஸ்லிம்கள் தொடர்பில் முதலமைச்சர் கரிசனையுடன் செயற்படுகின்றார்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் முகமது றயீஸ் தெரிவிப்பு



வடக்கு மாகாண முதலமைச்சர் ஒருபோதும் வடக்கு முஸ்லிம்களின் எதிராளியல்ல. முஸ்லிம்கள் தொடர்பாக முதலமைச்சர் கரிசனையுடன் செயற்படுகின்றார்.'அத்துடன் அபிவிருத்தி செயற்பாடுகளிலும் வடக்கு மாகாண சபையோ வடக்கு முதலமைச்சரோ முஸ்லிம்களைப் புறக்கணிக்கவில்லை என வடக்கு மாகாண சபை உறுப்பினர் முகமது றயிஸ் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் உறவினை சீர்குலைப்பதன் மூலம் தனது அரசியலை நிலை நாட்ட துடிக்கின்ற ஒருசிலரே முதல்வருக்கு எதிராக பிரசாரத்தை முன்வைத்துள்ளனர் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடக்கு மாகாண முதலமைச்சரும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடபுல முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதாகவும் முஸ்லிம்களை புறக்கணித்து வடக்கு மாகாண சபையின் அரசியலை அரங்கேற்றுவதாகவும் சிலர் சமூக வலைத்தளம் ஊடாகவும், பத்திரிகை அறிக்கைகள் மூலமாகவும், தனிப்பட்ட ஊடகங்கள் மூலகமாகவும் விமர்சித்து வருவதை முற்றிலுமாக எதிர்க்கிறேன்.

வடக்கு முதல்வர் ஒருபோதும் வடக்கு முஸ்லிம்களின் எதிராளி அல்ல. முஸ்லிம்கள் தொடர்பாக முதலமைச்சர் கரிசனையுடன் செயற்படுகின்றார் என்பதற்கு பல உதாரணங்களை என்னால் முன்வைக்க முடியும்.

வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டதன் பின்பு அதிகளவான காணியுறுதிப் பத்திரங்களை வடக்கு முஸ்லிம்களுக்கு குறிப்பாக வன்னி மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். அந்த வகையில் வவுனியா சாளம்பைக்குளம் கிராமத்தில் சுமார் 272 குடும்பங்களுக்கும் செட்டிகுளம், சூடுவெந்தபுலவு, பாவற்குளம்போன்ற பிரதேசத்தில் 133 குடும்பங்களுக்கும் அதே போன்று மன்னார் மாவட்டத்தின் முசலி மருதமடுவில் 210 குடும்பங்களுக்கும் வேப்பங்குளத்தில் 348 குடும்பங்களுக்கும் கரடிக்குளியில் 424 குடும்பங்களுக்கும் பாலைக்குளி கிராமத்தில் 238 குடும்பங்களுக்கும் ஏனைய பிரதேசங்களில் குறிப்பிட்ட தொகையினரும் உள்ளடங்கலாக 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் தத்தம் காணியுறுதிகளை பெற்றுக் கொள்ள வடக்கு மாகாணசபை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் அபிவிருத்தி செயற்பாடுகளிலும் வடக்கு மாகாண சபையோ வடக்கு முதலமைச்சரோ முஸ்லிம்களை புறக்கணிக்கவில்லை என்பதற்கு சான்றாக கடந்த வருடம் முதலமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய உட்கட்டமைப்பு விருத்திக்கு ஒரு கோடி ரூபா ஒதுக்கி அதன் வேலைகள் முடியும் தறுவாய்க்கு வந்துள்ளது.

மேலும் முதலமைச்சரின் பணிப்பின்பேரில் வீதி அபிவிருத்திக்காக போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் 60 இலட்சம் ரூபாவை ஒதுக்கி அவ்வேளைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மேலும் முதலமைச்சர் மீள் குடியேறும் மக்களுக்கான வீட்டுத் திட்டத்தில் பயனாளி தெரிவில் முஸ்லிம்களுக்கான பங்கு சமமானதாக இருக்க வேண்டும் என்ற அவரின் பணிப்பை நன்றியுடன் நினைவு கூறுகிறேன். உண்மையில் சிறுபான்மை சமூகத்திற்கான அரசியல் தீர்வு ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போது அது முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துபவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ற மாபெரும் மக்கள் இயக்கங்கள் இணைந்து உருவாக்கியிருக்கின்ற சகோதரத்துவ அரசியலை பொறுத்துக்கொள்ளமுடியாத, தமிழ், முஸ்லிம் உறவினை சீர்குலைப்பதன் மூலம் தனது அரசியலை நிலைநாட்ட துடிக்கின்ற வடக்கு முதல்வருக்கெதிரான பிரசாரங்களை அவிழ்த்து விட்டிருக்கின்றார்கள்.

வடபுல முஸ்லிம்கள் இப் பொய்ப் பிரசாரங்கள் தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. அத்துடன் எனது கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் ரவூப் ஹகீம், தமிழ் கூட்டமைப்



பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சம்பந்தன் ஐயா ஆகியோருக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு மிக்க தூரநோக்குடைய அரசியல்தொடர்பும் இருந்து வரும் நிலையில் சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படாத விடயங்களில் தமிழ் கூட்டமைப்புடன் ஒரு நட்புறவு அரசியலையே தலைவர் ரவூப் ஹகீமின் வழிகாட்டலில் செய்து வருகிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-9)




## ஒதியமலையில் 50வீடுகள் நிர்மாணிப்புக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலை கிராம அலுவலர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் 50 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகள், வீடுகள் இல்லாத பயனாளிகளுக்கே 1/2 ஏக்கர் வீதம் காணிகளும் தலா 5 இலட்சம் பெறுமதியான வீடுகள் வழங்கப்பட்டு தலா ஒரு ஏக்கர் வயல் காணிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்நாட்டும்நிகழ்வுநேற்று நண்பகல் 12 மணியளவில் ஒதியமலையில் நடைபெற்றது.

இதில்வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் விஜித கே.கமக, கிராம அலுவலர், பொதுமக்கள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1984 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த ஒதியமலை படுகொலையின் பின்னர் இப்பகுதியில் மக்கள் குடியேறாத நிலையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்புத் திட்டமானது எல்லையைப் பாதுகாக்கின்ற ஒரு நடவடிக்கையாக அமைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (2-28)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுளர் திறனாய்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் த.யோகானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2)

## பொருத்து வீட்டுத்திட்டத்துக்கான விண்ணப்பப் படிவங்களை இன்று வரை வழங்க முடியும்

கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு பொருத்து வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி இன்றாகும்.

ஆதலால் பயனாளிகள் தமக்கு வழங்கப்பட்ட பொருத்து வீட்டு விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி கிராம சேவையாளரிடம் வழங்க முடியும் என கண்டாவளை பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொருத்து வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி கடந்த 20 ஆம் திகதி என அரசாங்க அதிபரினால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் இன்று வரை வழங்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-309)

### 'தமிழர்களின் அடையாளத்தை அழிக்காதே'

## ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இளைஞர்கள் போராட்டம்

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பேருந்து நிலையத்திற்கு முன்பாக தமிழகத்தின் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக் காலை இளைஞர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

செட்டிகுளம் பகுதி இளைஞர்களின் ஏற்பாட்டில் அங்கு ஒன்றுகூடிய இளைஞர்கள், யுவதிகள் "தடை அதை உடை, உங்களுக்காய் நாங்கள் எங்களுக்காய் நீங்கள், தமிழால் இணைவோம் தமிழுக்காக வா தமிழா, கடல் கடந்தும் கலாசாரத்தை பாது காப்போம்" ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.




அத்துடன் தமிழர்களின் அடையாளத்தை அழிக்காதே, மத்திய அரசே தமிழகத்தின் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி கொடு" என எழுதப்பட்ட பல்வேறு சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.(2-250)

# கருவாடு பதனிடல் கட்டடம் திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் குழுக்களில் வெட்டுவாய்க்கால் கன்னிகா குழுவிற்கான கருவாடு பதனிடல் கட்டடத்திறப்பு நிகழ்வு கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுடைமைத்தொழில் முயற்சிக்கான இக்கட்டடத் திறப்புவிழாவில் வரோட் நிறுவன இயக்குநர் கிறிற்றியோன் அடிகளார், முல்லைத் தீவு பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அடிகளார், வட்டுவாகல் கன்னிமார் ஆலய பூசகர் தெ.பசிர்தன் ஐயா, வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட சமூக உத்தியோகத்தர் ந.தசரதன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (2-281)




# விவசாய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் மாநாடு நடைபெற்றது

(மல்லாவி)

உலகவங்கியின் நிதியுதவியுடன்விவசாயத்துறையை நவீன முறைப்படுத்துதல் வேலைத் திட்டத்தின் கீழ் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் விவசாய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் மாநாடு யாவில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.



இதன்போது, விவசாயிகளின் உற்பத்திகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் அவர்களது உற்பத்திகளை அதிகரிக்க ஆலோசனை வழங்கல் உட்பட நிதி வழங்கல் தொடர்பான தெளிவுபடுத்தும் கருத்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், ஐக்கிய தேசியக்கட்சியின்வவுனியா மாவட்ட இணைப்பாளர் ரோஹண கமகே, ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் செயலாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டுள்ளனர். (2-15)

## புதுக்குடியிருப்பு பிரதேச

# கலைஞர்களுக்கான ஒன்றுகூடலும் கலாசார பேரவையின் நிர்வாகத் தெரிவும்

வன்னிக்குறோஸ் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர்களுக்கான ஒன்றுகூடலும் புதுக்குடியிருப்பு பிரதேச கலாசார பேரவையின் நிர்வாகத்தெரிவும் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு கலாசார மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கலாசாரப் பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா தலைமையில் இடம்பெற்றது.

தலைவராக பாடகர் நாகராஜன்,செயலாளராக கவிஞர் ஜெயம் ஜெகன், பொருளாளராக கவிஞர் யோ.புரட்சி ஆகியோருடன் பதினைந்து உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் த.நீதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கருத்துரைகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் இணைப்பாளர் ச.ரூபன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இவ்வருடம் கலாசார நிகழ்வுகளில் தமிழர்களின் பாராம்பரிய கலைகளின் பறை, கரகாட்டம், கும்மி, கோலாட்டம், நாட்டுக்கூத்துக்கள், பாடகர்கள் தெரிவு என்பன போட்டி நிகழ்வுகளாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. (2-310)

# வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று முற்பகல் 9.30 மணிக்கு பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன் கட்டு உபஅலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்கிழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அன்றையதினம் "பல்லவம்" எனும் சஞ்சிகையும் வெளியிடப்படும் என சபையின் செயலாளர் தெரிவித்தார். இதற்கான அழைப்பை பிரதேச சபை வாசகர் சமூகம் விடுத்துள்ளது. (2-84)

# அக்கராயன்குளத்து நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு விவசாயிகளிடம் வலியுறுத்து

கிளிநொச்சி அக்கராயன் குளத்து நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கிளிநொச்சி விவசாயத் திணைக்களமும் இக்குளத்தின் கீழான விவசாய அமைப்புகளும் விவசாயிகளிடம் வலியுறுத்தி வருகின்றன. அக்கராயன் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள 4,500 ஏக்கர் வரையான காலபோக நெற்செய்கைக்கு தற்போது நீர்ப்பாசனம் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை குளத்தின் வலதுகரை வாய்க்கால் மூலமாக உருத்திரபுரத்தின் நீவில பகுதியிலுள்ள 1,200 ஏக்கர் வரையான வயல் நிலங்களுக்கும் நீர் விநியோகம் நடைபெறுகிறது.

இந்நிலையில் குளத்தின் நீரை வயல்களுக்கு சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் எனவும் நீர் வீண்விரயம் ஏற்பட்டு கழிவு ஆறுகள் மூலம் நீர் வெளியேறாமல் விவசாயிகள் நீரைப் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலே இரணைமடு குளத்தின் கீழான நெற்செய்கை வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய நீர்ப்பாசனக் குளங்களில் இருந்து நீர்ப்பாசன முயற்சிகள் நெற்பயிர்களுக்கு சிறந்த திட்டமிடல்களுடன் நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (2-312)

# பிலவுக்குடியிருப்பு கிராமத்திற்கான நில அளவீடுகள் இன்று நடைபெறும்

## கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கேப்பாபுலவு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பிலவுக்குடியிருப்பிற்கு இன்று திங்கட்கிழமை நில அளவையாளர்கள், வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் சென்று நில அளவீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சிவபாலன் குணபாலன் தெரிவித்துள்ளார்.

பிலவுக்குடியிருப்பு கிராமத்தில் 64 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் காணப்படுவதாகவும் அவற்றில் தங்களை மீள்குடியேற அனுமதிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்து 2012 ஆம் ஆண்டு சொந்த நிலத்தில் மீள்குடியேற்றுவதாக தெரிவித்து அழைத்து வந்து மாதிரிக் கிராமம் ஒன்றில் தங்களை மீள்குடியேற்றியதாகவும் எனினும் தாம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதுதமது காணிகளில் விமானப்படையினர் நிலைகொண்டிருந்ததாகவும் அம்மக்கள் குறிப்பிட்டனர்.

எனினும் விமானப்படையினர் குறித்த பகுதியிலிருந்து விலகி சென்றிருந்த நிலையில் மக்கள் விமானப்படையினரிடம் சென்று காணிகளை விடுவிக்குமாறு கோரிய நிலையில் வனவளப்பாதுகாப்பு பிரிவிடம் கடிதம் ஒன்றை பெற்று வருமாறு கோரியதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வனவளப் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய நிலையில் காணிகளின் அளவீடு தொடர்பில் தமக்கு தெரியாதுள்ளதாகவும் அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் காணிகளை அளவீடு செய்தால் தாம் காணிகளை விடுவிப்பதாகவும் வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக மக்கள் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் இன்று நில அளவையாளர்கள் மற்றும் வனவளப்பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் பிலக்குடியிருப்பிற்குச் சென்று நில அளவீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (2-281)

# பற்றிக் உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கிவைப்பு

(பனிக்கன்குளம்)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் கிராம மட்ட அமைப்புக்களை வாழ்வாதாரத்தில் உயர்த்தும் செயற்றிட்டத்தின் கீழ், வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திற்குரிய கலம்பகஸ் வெவ கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 2016 ஆம் ஆண்டிற்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் இருந்து ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பற்றிக் ஆடைகள் உற்பத்தி செய்வதற்கான சகல உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியாவில் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்கள மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த பற்றிக் உற்பத்திக்கான உள்ளீடுகளை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் க.கமலேஸவரன், மாகாண சபை உறுப்பினர் ஜி.டி.லிங்கநாதன் ஆகியோரும் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ஜெ.ஜெ.சி.பெலிசியன், வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆகியோர்இணைந்து வழங்கி வைத்தனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் பா.டெனீஸ்வரன்,

தனது அமைச்சினூடாக மக்களது நலனுக்காகவும், மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் தன்னால் முன்னெடுக்கப்படும் சகல திட்டங்களும் சரியான முறையில் மாகாணத்தின் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுகிறது. அந்த வகையிலேயே குறித்த நமது சகோதர இனமாகிய சிங்களவர்களை கொண்ட குறித்த கிராமத்திற்கும் உதவித்திட்டம் வழங்கபட்டுள்ளது. அனைவரும் ஒற்றுமைப்பட்டு எமது மாகாணத்தையும் எமது நாட்டையும் அபிவிருத்தியை நோக்கி நகர்த்தவேண்டியவர்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

இந்த திட்டத்தைப் பயன்படுத்தி கிராமத்தில் ஒரு அபிவிருத்தியை கொண்டு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (2-281)

# மாணவர் கௌரவிப்பும் டெங்கு விழிப்புணர்வும்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றி அதி உயர் சித்திகளைப் பெற்ற 18 பேர் இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி வலயத்தில் நடைபெறும் மாவட்ட அதிபர்கள் கூட்டத்தில் கௌரவிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

கலை, விஞ்ஞானம், வர்த்தகம், தொழில்நுட்பம், பொறியியல், உயர்முறைத் தொழில்நுட்பம் ஆகிய 6 துறைகளில் உயர் சித்திகளைப் பெற்றவர்களைகௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் இன்றைய கூட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் விளக்கமும் அளிக்கப்படவுள்ளது.

இதேவேளை அண்மையில் நடைபெறவுள்ள ஆயுள்வேத மருத்துவமுறைக் கண்காட்சி சம்பந்தமான விளக்கமும் அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறைப் பரீட்சை முடிவின்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 23 மாணவர்கள் 3 ஏ சித்தி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-84)




# தேளும் தவளையும்

அது ஒரு அழகிய காடு, அந்த காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுவில் ஒரு நீரோடை இருந்தது. அந்தத் தேளுக்கு இக்கரையில் இருந்து அக்கரைக்கு போக வேண்டி இருந்தது.


அக்கரைக்குப் போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, ஆமை போன்றவைகளிடம் தேள் உதவி கேட்டது. ஆனால் அந்த பொல்லாத தேள் தம்மை கொட்டிவிடும் என்று அவை மறுத்து விட்டன.


எப்படி நீரோடையைக் கடப்பது என்று தேள் யோசித்துக் கொண்டு இருந்தபோது அந்த நீரோடையில் தவளை ஒன்று வந்து கொண்டிருந்தது.

தவளையைக் கண்ட தேள், "தவளையாரே! நான் அக்கரைக்குச் செல்லவேண்டும் என்னை அங்கு கொண்டு போய் விட்டு விடுவீரா?" என்று கேட்டது.

"நானும் அக்கரைக்குத்தான் போகிறேன், என் முதுகில் ஏறிக் கொள்ளும் உம்மை நான் அக்கரையில் விட்டுவிடுகிறேன்!", என்றது தவளை.

தேளும் தவளையின் முதுகில் ஏறிக்கொண்டது. தவளை நீரில் நீந்திச்செல்ல அரம்பித்தது. சிறிது தூரம் தான் தவளை சென்றிருக்கும் தேளுக்கு ஒரு யோசனை வந்தது, நான் பல பேரைக் கொட்டியிருக்கிறேன். அவர்கள் வலியால் துடித்ததையும் பார்த்திருக்கின்றேன்.





ஆனால் நான் ஒரு நாளும், தவளையை கொட்டவில்லை, இந்த தவளையைக் கொட்டினால் எப்படித் துடிக்கும்?

இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்று தவளையை கொட்டிப் பார்க்க நினைத்தது.

தேள் தவளையின் முதுகில் கொட்டியது. ஆனால் தவளை பேசாமல் போய்க்கொண்டிருந்தது.

தேள் தவளையைப் பார்த்து, "தவளையாரே! உமது உடம்பில் வலியே வருவதில்லையா?" என்று கேட்டது.

தேளின் கெட்ட எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத தவளை, "எனது முதுகு வழவழப்பானது. அதனால் எனக்கு அந்த இடத்தில் வலியே வருவதில்லை" என்று சொன்னது தவளை.

ஆனால் எனது கழுத்துப் பக்கம் மென்மையாக இருக்கும். இதில் தான் எனக்கு வலிகள் காயங்கள் ஏற்படும் என்று சொன்னது தவளை. ஓகோ் அப்படியா? என்று கேட்ட தேள், மெதுவாக தவளையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்றது.

கழுத்தில் இருந்து தலைப் பகுதிக்குச் சென்ற தேள் தவளையை கொட்ட ஆரம்பித்தது.

தேள் கொட்டவருவதை அறிந்து தவளை தலையை தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டது. தேள் நீரோடையில் விழுந்து விட்டது.

தனக்கு உதவி செய்த தவளைக்கு கேடுவிளைவிக்க நினைத்த தேள் தண்ணீரில் மூழ்கி இறந்தது. தவளை கரையை நோக்கி நீந்திச் சென்றது.

**நீதி:- ஒருவர் எவ்வித பலனையும் எதிர்பாராமல் எமக்கு உதவி செய்தாராயின், அவரின் உதவியை நாம், எம் வாழ் நாளில் என்றுமே மறந்து விடலாகாது. அவருக்கு நன்றியுடையவனாக இருத்தல் வேண்டும். மாறாக அவருக்கு கெடு செய்ய நினைப்போமாயின், அது எம்மையே வந்து சேரும்.**




- 1556 - சீனாவின் சாங்சி மாநில நிலநடுக்கத்தில் 830,000 வரையானோர் இறந்தனர். உலக வரலாற்றில் மிக அதிகமானோர் கொல்லப்பட்ட நிலநடுக்கம் இதுவாகும்.
- 1570 - ஸ்கொட்லாந்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது.
- 1719 - புனித ரோம் பேரரசின் கீழ் லீக்டன்ஸ்டைன் நாடு உருவாக்கப்பட்டது.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது கத்தோலிக்கக் கல்லூரியான ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1793 - ரஷ்யாவும் பிரஷ்யாவும் போலந்தைப் பிரித்தனர்.
- 1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா மீண்டும் கைப்பற்றிக் கொண்டது.
- 1937 - லியோன் ட்ரொட்ஸ்கி தலைமையில் ஜோசப் ஸ்டாலின் அரசைக் கவிழ்க்க முயன்றதாக 17 கம்யூனிஸ்டுகளின் மீது மாஸ்கோவில் விசாரணைகள் ஆரம்பமாயின.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் தலைநகர் திரிப்பொலியை நாசிகளிடம் இருந்து பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஆஸ்திரேலிய, மற்றும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் பப்புவாவில் யப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர். இது பசிபிக் போரில் யப்பானியரின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.
- 1950 - இஸ்ரேலின் சட்டசபை ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்தது.
- 1957 - சென்னை மாநிலத்தில், தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது.
- 1973 - வியட்நாமில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் அறிவித்தார்.
- 1996 - ஜாவா நிரலாக்க மொழியின் முதற் பதிப்பு வெளியானது.
- 1998 - யாழ்ப்பாணம், புங்குடுதீவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி துணை இராணுவக்குழுவின் முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதில் அம்முகாமில் இருந்த ஒன் பது பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - அமெரிக்க ஊடகவியலாளர் டானியல் பேர்ள் கராச்சியில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் கொலை செய்யப்பட்டார்.
- 2005 - திருச்சி ஸ்ரீரங்கத்தில் கல்யாண மண்டபத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் மணமகன் உள்பட 62 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1832 - எடுவர்ட் மனே, பிரெஞ்சு ஓவியர்.(இ. 1883)
- 1833 - முத்து குமாரசுவாமி, இலங்கை சட்டத் தரணி, அரசியல்வாதி . (இ. 1879)
- 1862 - டேவிட் இல்பேர்ட்டு, உருசிய-செருமன் கணிதவியலாளர் . (இ. 1943)
- 1897 - சுபாஷ் சந்திர போஸ், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் . (இ. 1945)
- 1898 - செர்கீ ஐசென்ஸ்டைன், இலாத்விய-உருசிய இயக்குனர் . (இ. 1948)
- 1907 - ஹிடேகி யுகாவா, இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற யப்பானியர். (இ. 1981)
- 1926 - பால் தாக்கரே, இந்திய அரசியல்வாதி. (இ.2012)
- 1930 - டெரெக் வால்காட், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.
- 1984 - அர்ஜென் ரொபென், டச்சு கால்பந்தாட்ட வீரர்.
- 1989 - கார்த்திக் புகழேந்தி, தமிழ் எழுத்தாளர்.

**இறப்புகள்**

- 1944 - எட்வர்ட் மண்ச், நோர்வே ஓவியர். (பி. 1863)
- 1966 - த. மு. சபாரத்தினம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி. (இ. 1895)
- 1967 - அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், கருநாடக இசை வித்துவான். (பி. 1890)
- 1989 - சால்வதோர் தாலீ, எசுப்பானிய ஓவியர். (பி. 1904)
- 2002 - ரோபேர்ட் நோசிக், அமெரிக்க மெய்யியலாளர். (பி. 1938)
- 2014 - எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, இலங்கை மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதிபதி. (பி. 1953)
- 2015 - அப்துல்லா, சவூதி அரேபிய மன்னர். (பி.1924)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 40 | 80 | 70 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 95 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 200 | 300 | 240 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 80 | 80 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 70 | 80 | 70 |
| கோவா | 30 | 30 | 20 | 30 | 30 | 40 | 30 |
| கரட் | 80 | 60 | 60 | 60-120 | 60 | 120 | 50 |
| பூசணி | 80 | 40 | 35 | 80 | 50 | 60 | 60 |
| புடோல் | 80 | 40 | 50 | 70 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 180 | 80 | 80 | 100 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 200 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 | 90 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 100 | 80 | 140 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 120 | 120 | 60 |
| பீற்றூட் | 50 | 100 | 50 | 60 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 100 | 170 | 200 | 180 | 300 | 180 |
| முருங்கைக்காய் | 650 | 800 | 500 | 500 | 600 | 600 | 600 |
| போஞ்சி | 100 | 100 | 70 | 80 | 80 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | 20 | 50 | — | 60 | 80 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 | 50 | 65 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 100 | 150 | 240 | 180 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 180 | 100 | 200 | 120 | 140 | 200 | 150 |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 60 | 60 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | — | 100 | 50 | 60 | 60 | 60 | 60 |

# அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு ரத்து

## அவசர சட்டத்தை ஏற்க மறுத்து நிரந்தரத் தீர்வு கோரி போராட்டம்

(சென்னை)

**அலங்காநல்லூரில் பொதுமக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக ஜல்லிக்கட்டு இரத்துச் செய்யப்பட்டது. பொதுமக்களை சமரசம் செய்ய முடியாத நிலையில் அதிருப்தியுடன் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சென்னை திரும்பினார்.**



தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டியை, பீட்டா எனும் அமைப்பு எதிர்த்து வழக்கு தொடர்ந்ததால் கடந்த 2014ஆம் ஆண்டு உச்ச நீதிமன்று தடை விதித்தது.

இதனால் கடந்த 2 ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு நடத்த இயலாமல் போன நிலையில், இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கொதித்தெழுந்து ஜல்லிக்கட்டுக்காக போராட்டம் நடத்தி வருகிறார்கள். தமிழர்களின் இந்த இன உரிமை மீட்புப் போராட்டம் மத்திய - மாநில அரசுகளை பணிய வைத்தது.

ஜல்லிக்கட்டுக்கு இடையூறாக இருக்கும் மத்திய அரசின் மிருகவதை தடை சட்டத்தில் திருத்தம் செய்து அவசர சட்டம் கொண்டு வந்துள்ளனர். ஆளுநர் வித்யாசாகர் ராவ் நேற்று முன்தினம் பிற்பகலில் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து அந்த அவசர சட்டம் உடனடியாக அமுலுக்கு வந்தது.

இதையடுத்து மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டியை தானே முன்நின்று தொடங்கி வைப்பேன் என்று முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார். ஜல்லிக்கட்டை தொடக்கி வைப்பதற்காக அவர் நேற்று முன்தினம் மாலை சென்னையில் இருந்து விமானத்தில் மதுரை சென்றார்.

இந்த நிலையில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள அவசர சட்டத்தை தமிழக மக்களேற்கவில்லை. சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை உட்பட அனைத்து ஊர்களிலும் போராட்டம் நடத்தி வரும் இளைஞர்கள், "ஜல்லிக்கட்டுக்கு நிரந்தர பாதுகாப்பு கிடைக்கும் வகையில் சட்டம் கொண்டு வர வேண்டும். பீட்டா அமைப்பை தடை செய்ய வேண்டும்" என்பதில் உறுதியாகவுள்ளனர்.

இருப்பினும் பொதுமக்களின் கடும் எதிர்ப்பை மீறி அலங்காநல்லூரில் வாடிவாசலை திறந்து ஜல்லிக்கட்டை நடத்த மதுரை மாவட்ட நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் மாலை ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார்கள். ஜல்லிக்கட்டு காளைகள் துள்ளி ஓடும் பாதையில் இரு புறமும் தடுப்புகள் அமைக்க குழிகள் தோண்டப்பட்டன.

தமிழ்நாட்டில் எத்தனையோ இடங்களில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்பட்டாலும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுதான் உலகப்புகழ் பெற்றது. அங்கு நடக்கும் ஜல்லிக்கட்டை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் பார்க்க வருவார்கள். அலங்காநல்லூர் கோட்டை முனியாண்டி கோவில் திடல் பகுதியில் தான் வாடிவாசல் உள்ளது.

அங்கு இருந்து சீறிப் பாய்ந்து வரும் ஜல்லிக்கட்டு காளைகளை இளைஞர்கள் சுமார் 800 மீற்றர் தூரம் ஓடிச் சென்று அடக்குவார்கள். அந்த பாதையில் நேற்று முன்தினம் மாலை சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் தடுப்பு கட்டைகள் கட்டப்பட்டன. இதை அறிந்ததும் அலங்காநல்லூர் மக்கள் கடும் ஆவேசம் அடைந்தனர்.

தடுப்பு கட்டைகள் அமைக்கும் பணியைத் தடுத்து நிறுத்தினர். தடுப்பு கட்டை அமைக்க வந்த தொழிலாளர்களையும் திருப்பி அனுப்பினர்.

இதையடுத்து அலங்காநல்லூரில் எப்படியாவது ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த வேண்டும் என்று மதுரை மாவட்ட ஆட்சியாளர் வீரராகவ ராவ், பொலிஸ் அதிகாரி விஜயேந்திர பிதாரி இருவரும் அலங்காநல்லூருக்கு சென்றனர். அங்கு அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியாளர்களுடனும், ஊர் மக்களுடனும் பேச்சு நடத்தினர். இரவு 2 மணி வரை பேச்சு நடந்தது.

ஆனால் அலங்காநல்லூர் ஊர் மக்கள் தமிழக அரசின் அவசர சட்டத்தை ஏற்க மாட்டோம் என்று உறுதிபட தெரிவித்தனர். இதனால் அதிகாரிகளின் சமரச முயற்சி தோல்வியில் முடிந்தது. இதையடுத்து அலங்காநல்லூரில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 2500 பொலிஸார் அலங்காநல்லூரில் குவிக்கப்பட்டனர். இதனால் வெளியூர்களில் இருந்து காளைகளை கொண்டு வந்து வாடிவாசலை திறந்து விடக்கூடும் என்று அலங்காநல்லூர் மக்களிடம் சந்தேகம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அலங்காநல்லூருக்குள் வரும் அனைத்து பாதைகளிலும் தடை ஏற்படுத்தினார்கள்.

அலங்காநல்லூர் ஊருக்குள் செல்ல மதுரை சாலை, வாடிப்பட்டி சாலை, அழகர் கோவில் சாலை, பாலமேடு வழி என 4 வழிகள் உள்ளன. இந்த 4 பாதைகளிலும் பெரிய பெரிய பள்ளங்களை அகழி போல தோண்டி தடை ஏற்படுத்தினார்கள். மதுரை-அலங்காநல்லூர் வழித்தடத்தில் மரங்களை வெட்டி போட்டனர்.



சில பாதைகளில் லொறிகள் மற்றும் மாட்டு வண்டிகளை கொண்டு வந்து நிறுத்தினர். இதனால் வெளியூர்களில் இருந்து யாரும் அலங்காநல்லூருக்குள் நுழைய முடியாத நிலை ஏற்பட்டது.

இதற்கிடையே அலங்காநல்லூர் செல்வது பற்றி மதுரை பாண்டியன் ஹோட்டலில் இருந்த முதலமைச்சர் ஓ.பனீர் செல்வம் நேற்றுக் காலை ஆலோசனை நடத்தினார். அமைச்சர்கள் செல்லூர் ராஜு, உதயகுமார், தலைமை செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், மாவட்ட ஆட்சியாளர் வீரராகவராவ், ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர். அப்போது அலங்காநல்லூருக்கு யாரும் செல்ல முடியாத நிலை இருப்பதை ஓ.பன்னீர்செல்வத்திடம் அதிகாரிகள் தெரிவித்தனர.

என்றாலும் அலங்கா நல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்த ஏற்பாடு செய்ய உத்தரவிடப்பட்டது. இதையடுத்து அதிகாரிகள் தரப்பில் மீண்டும் அலங்காநல்லூரில் வாடிவாசலை திறக்க பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதை அறிந்ததும் அலங்காநல்லூர் ஊர் மக்கள் ஆவேசம் அடைந்தனர்.

ஜல்லிக்கட்டு போட்டி நடக்கும் மைதானத்தில் திரண்டனர். சுமார் 1500 பேர் அங்கு குவிந்தனர். தமிழக அரசின் அவசர சட்டத்தை ஏற்க மாட்டோம் என்று கோஷமிட்டனர்.

உள்ளூர்காரர்கள் யாரும் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்க மாட்டோம். ஜல்லிக்கட்டு காளைகளையும் அனுப்ப மாட்டோம் என்று அலங்காநல்லூர் மக்கள் அறிவித்தனர்.

வழக்கமாக அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியின்போது முனியாண்டி கோவில் காளை தான் முதலில் திறந்து விடப்படும். அதன் பிறகுதான் மற்ற காளைகளை திறந்து விடுவார்கள்.

ஆனால் எந்த ஒரு காளையும் அலங்காநல்லூர் வாடிவாசல் பகுதிக்கு வர முடியாதபடி ஊர்மக்கள் தடுத்து நிறுத்தினார்கள். இதனால் ஜல்லிக்கட்டு நடத்த அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

ஜல்லிக்கட்டுக்கு உள்ள தடையை நிரந்தரமாக நீக்க வேண்டும். பீட்டாவை தடை செய்ய வேண்டும் என்பதில் உறுதியாகவும் தெளிவாகவுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் சட்ட உட்பிரிவுகளிலும் தெளிவான, துல்லியமான மன நிலையுடன் இருபது அரசு அதிகாரிகளை நிலைகுலைய செய்துள்ளது.

இதனால் எந்த வகையிலும் அலங்காநல்லூர் மக்களை அதிகாரிகளால் சமரசம் செய்ய முடியவில்லை.

இதன் காரணமாக அலங்காநல்லூரில் நேற்றுக் காலை 10 மணிக்கு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தொடக்கி வைப்பதாக இருந்த ஜல்லிக்கட்டு போட்டி இரத்து செய்யப்பட்டது.

அலங்காநல்லூரில் போட்டி நடத்த கடும் எதிர்ப்பு கிளம்பியதால் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டியில் நடக்கும்போட்டியை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடக்கி வைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து அங்குள்ள கைலாசநாதர் கோவில் திடலில் வாடிவாசல் அமைக்கப்பட்டது. சுற்றிலும் தடுப்பு கட்டப்பட்டு போட்டிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மாவட்ட கலெக்டர் வினய் நேரில் சென்று ஆய்வு செய்தார். பொலிஸ் அதிகாரி சரவணன் தலைமையில் ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

ஆனால் நத்தத்தில் ஜல்லிக்கட்டு போட்டியை ஓ.பன்னர்செல்வம் தொடககி வைகக அந்த ஊர் இளைஞர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஜல்லிக்கட்டுக்கு நிரந்தர சட்டம் கொண்டுவந்த பின்னரே போட்டி நடத்த வேண்டும் என்றுகூறிய அவர்கள் நத்தம் வாடிவாசல் முன் அமர்ந்து போராட்டம் நடத்தினர். இதில் மாடுபிடி வீரர்கள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நேரம் ஆக ஆக சுற்றுவட்டார கிராமமக்களும், இளைஞர்களும் ஜல்லிக்கட்டு நடைபெறும் வாடிவாசல் முன்பு திரண்டனர். சுமார் 100இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் திரண்டதால் நத்தம் நகரம் பரபரப்பானது.

மாவட்ட நிர்வாகம் சார்பில் உள்ளூர் பிரமுகர்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது ஓ.பன்னீர்செல்வம் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நிலைமை மோசமானது. ஜல்லிக்கட்டு நடத்தினால் விபரீதமாகும் என ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் தெரிவித்தனர்..

எனவே நத்தம் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி இரத்துச் செய்யப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்தது.


இதனை அறிந்ததும் மாடுபிடி வீரர்கள் பீட்டா அமைப்புக்கு எதிராக கோஷமிட்டனர். ஜல்லிக்கட்டு நடத்த நிரந்தர சட்டம் கொண்டு வரவேண்டும் என போராட்டம் நடத்தியபடி இருந்தனர்.

அறிவித்தபடி எந்த ஒரு ஊரிலும் வாடிவாசலை திறந்து ஜல்லிக்கட்டு போட்டியை தொடக்கி வைக்க முடியாமல் போனதால் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஏமாற்றத்துடன் சென்னைக்குத் திரும்பினார். (இ-7)

# எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தில் 32 பேர் பரிதாபமாகப்பலி!

## நாசவேலை காரணமா?





ஆந்திர மாநிலத்திலுள்ள விஜயநகரம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்ட விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ள நிலையில் இவ் விபத்துக்கு நக்சலைட்களின் நாசவேலை காரணமாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

ஒடிசா மாநில தலைநகரான புவனேஸ்வர் - சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள ஜக்தல்பூர் இடையே செல்லும் ஜக்தல்பூர்-புவனேஸ்வர் எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் பின்னிரவு 11 மணியளவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள விஜயநகரம் மாவட்டத்தின் குனேரு ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தை விட்டு விலகிச் சென்று கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ள நிலையில். இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் நக்சலைட்களின் நாசவேலையால் இவ் விபத்து நடந்திருக்கலாம் என கருதப்படுகிறது. இந்த பாதையை ஜக்தல் பூர்- புவனேஸ்வர் எக்ஸ்பிரஸ் ரயில் கடப்பதற்கு சிறிது நேரத்துக்கு முன்னர் ஒரு சரக்கு ரயில் இதே தண்டவாளத்தின் வழியாக சென்றுள்ளது.

அந்த ரயில் கடந்த பின்னர். பின்னால் ஜக்தல்பூர்- புவனேஸ்வர் எக்ஸ்பிரஸ் வந்தபோது தண்டவாளத்தில் வெடிச் சத்தம் போன்ற ஒரு ஓசை கேட்டதாகவும். அதன் பிறகு இந்த ரயில் கவிழ்ந்ததாகவும் விபத்துக்குள்ளான ரயிலின் சாரதி தெரிவித்துள்ளார்.

இந்த வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து பார்க்கும்போது இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் நக்சலைட் தீவிரவாதிகள் வெடி குண்டுகளால் தண்டவாளத்தை தகர்த்து. ரயிலை கவிழ்க்க முயற்சித்த தகவல் தெரிய வந்துள்ளதாகவும். மேற்கொண்டு இதுதொடர்பாக விசாரணை நடந்து வருவதாகவும் ரயில்வே பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## ஜல்லிக்கட்டுக்கு களம்

# மெரினா கடற்கரையில் போராட்டம் தொடர்கிறது



தமிழகத்தின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்தக்கோரி சென்னை மெரினாவில் எழுச்சி குறையாத ஆர்ப்பாட்டம் நீடிக்கிறது.

சென்னை மெரினாவில் கடந்த 17ஆம் திகதி இளைஞர்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்திற்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகியது.

பெண்களும். மாணவிகளும் முழு அர்ப்பணிப்புடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இளைஞர்களுக்கு இணையாக ஆவேசமாக கோஷங்களை எழுப்புகிறார்கள். ஜல்லிக்கட்டு தடைக்கு காரணமான பீட்டா அமைப்பு மீது கோபக் கணைகளை வீசுகிறார்கள். மாணவர்களின் போராட்டத்தின் எழுச்சியைக் கண்டு ஒட்டு மொத்த தமிழ் சமுதாயமே முழு ஆதரவை அளித்துள்ளது.

அலை அலையாய் திரண்டு வரும் மக்கள் கூட்டத்தால் மெரினா கடற்கரைக்கு செல்லும் எல்லா வீதிகளும் முடங்கின. சென்னை கடற்கரை-வேளச்சேரி மார்க்க பறக்கும் ரயில்கள் நிரம்பி வழிந்தன.

நேற்று சுமார் 10 இலட்சம் முதல் 12 இலட்சம் வரை பொது மக்கள் திரண்டு வந்து எழுச்சிமிகு ஆதரவு அளித்துள்ளனர். மெரினாவில் எழுச்சி குறையாத ஆர்ப்பாட்டம் நீடித்து வருகிறது. (இ-7)

## 4வது நாளாக ரயில்கள் ரத்து



மறியல் போராட்டத்தால் 4வது நாளாக மதுரை ரயில் நிலையம் முடக்கப்பட்டுள்ளதால் அனைத்து ரயில்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக கோடிக்கணக்கில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தி வரும் மாணவர்கள். இளைஞர்கள் கடந்த 19ஆம் திகதி மதுரை செல்லூர் வைகையாற்று ரயில் பாலத்தில் வந்த நாகர் கோவில் பயணிகள் ரயிலை மறித்து போராட்டம் நடத்தினர். இதேபோல் ரயில் நிலையம் அருகிலும் செங்கோட்டை ரயிலை மறித்து மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டம் நேற்று 4-வது நாளாக நீடித்தது. ரயில் மறியல் போராட்டம் காரணமாக மதுரை ரயில் நிலையம் முற்றிலும் முடங்கியது. தினமும் பல்லாயிரக்கணக்கானோர் வந்து செல்லும் ரயில் நிலையம் ஆட்கள் இல்லாமல் வெறிச்சோடி கிடக்கிறது. வெளியூர்களுக்கு செல்ல வேண்டிய ரயில்கள். நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

4-வது நாளாக மதுரை ரயில் நிலையம் முடக்கப்பட்டுள்ளதால் அனைத்து ரயில்களும் இரத்து செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக கோடிக்கணக்கில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. (இ-7)

# ஜல்லிக்கட்டுக்கு நிரந்தரத்தீர்வு வேண்டும் மத்திய அரசிடம் ஸ்டாலின் வலியுறுத்து



(சென்னை)

ஜல்லிக்கட்டுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னையில் நடந்த உண்ணாவிரத போராட்டத்தில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

ஜல்லிக்கட்டு மீதான தடையை நிரந்தரமாக நீக்கக் கோரி தி.மு.க. சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று உண்ணாவிரத போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்திற்கு தி.மு.க.. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

தி.மு.க. முதன்மை செயலாளர் துரைமுருகன். அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி. மகளிர் அணி செயலாளர் கனிமொழி எம்.பி. எம்.பி.க்கள் திருச்சி சிவா. டி.கே.எஸ். இளங்கோவன். முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி. பொன்முடி. ஏ.வ.வேலு. கே.என்நேரு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போர்ாட்டத்தின் நிறைவில் பேசிய மு.க.ஸ்டாலின். ஜல்லிக்கட்டு போட்டியை பெருமையாக கூறவேண்டுமானால் "மெரினா புரட்சி" என்று கூறும் அளவுக்கு அந்தப் போராட்டம் வரலாற்றில் இடம் பெறப்போகிறது. நாம் பல போராட்டங்களைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறோம்.

இன்றைக்கு மெரினா போராட்டமும் இடம்பெறக் கூடிய வகையில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தியுள்ள மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் தி.மு.கவின் சார்பில் எனது வாழ்த்துகளையும். பாராட்டுகளையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் டில்லிக்கு புறப்பட்ட போது. தி.மு.க. சார்பில் வரவேற்கிறோம். மகிழ்ச்சியடைகிறோம். வாழ்த்துகிறோம். வெற்றியோடு திரும்பி வாருங்கள் என்றேன்.

நாங்கள் கட்சி ரீதியாக இதைப் பார்க்கவில்லை. அரசியல் ரீதியாக நாங்கள் பார்த்திருந்தால் எதையெதையோ சொல்லியிருக்கலாம். ஆனால். கண்ணியத்தோடு. அரசியல் நாகரிகத்தோடு. இது தி.மு.க. அ.தி.மு.க.வுக்கு இருக்கக்கூடிய பிரச்சினை இல்லை. ஒட்டு மொத்த தமிழர்களின் வீர விளையாட்டாக இருக்கக் கூடிய ஜல்லிக்கட்டுக்கான பிரச்சினை. ஆக. அந்த உணர்வோடு நாங்கள் அதை வரவேற்றோம்.


இதே அவசர சட்டத்தை மாநில அரசு முன்பே கொண்டு வந்திருக்கக் கூடாதா? தானாக செய்ய வேண்டியதை தடியால் அடித்துத்தான் செய்ய வேண்டிய சூழ்நிலை இன்று தமிழ்நாட்டிலே இருக்கிறது. நாங்கள் மக்கள் இயக்கமாக மாறிய பிறகு இன்றைக்கு அவசர சட்டத்தை அரசு கொண்டு வருகிறது என்று சொன்னால் வரவேற்கிறோம். ஆனால் அதேநேரத்தில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள். தமிழ் இளைஞர்களின் உணர்வு மதிக்கப்பட வேண்டும். தமிழ் கலாசாரம் போற்றப்பட வேண்டும். காப்பற்றப்பட வேண்டும் என்ற காரணத்தினால்தான் அவசர சட்டம் என்று சொன்னவுடன் நாங்கள் வரவேற்றோம். அதை யாரும் மறுக்கவில்லை.

ஆனால். அவசர சட்டம் மட்டும் கொண்டுவந்தால் போதாது. காட்சிப்படுத்தக் கூடிய பட்டியலிலிருந்து காளையை நீக்கக்கூடிய அந்த சட்டத்தையும் கொண்டு வர வேண்டும் என்பதுதான் தி.மு.கவின் நோக்கம் என்பதை இந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தின் கோரிக்கையாகக் கூற விரும்புகிறேன். அதுதான் நிரந்தரத் தீர்வாக அமைந்திட முடியும்.

இந்த ஆண்டு மட்டுமல்ல எந்த ஆண்டாக இருந்தாலும் பொங்கல் விழா என்று வருகிறபோது ஜல்லிக்கட்டுக்கு தடையே இருக்கக்கூடாது. அப்படி ஒரு சட்டத்தை இந்த அரசு உருவாக்க முன்வர வேண்டும். எனவே. மாநில அரசின் அவசர சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும். மத்திய அரசு தன்னுடைய அறிக்கையை வாபஸ் பெற்று காளைகளை வைத்து ஜல்லிக்கட்டு நடத்திட வழிவகை அமைத்துத் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நிரந்தரத் தீர்வை காணக்கூடிய வகையில். மத்திய அரசு உடனடியாக ஈடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறினார் பராக் ஒபாமா




அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த பராக் ஒபாமா வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறினார்.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் கடந்த 20ஆம் திகதி பதவி ஏற்றுக்கொண்டார்.

இதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா வெள்ளை மாளிகையை விட்டு பிரியாவிடை பெற்று வெளியேறும் காட்சி மற்றும் அவரை டொனால்ட் டிரம்ப் வழியனுப்பி வைக்கும் காட்சி என்பன இணையத்தளத்தில வெளியாகியுள்ளன. (இ-7)

# சிலியில் பாரிய காட்டுத் தீ! அவசரகால நிலை பிரகடனம்



சிலியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட பாரிய காட்டுத்தீயினால் சுமார் 80 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ள நிலையில் அங்கு அவசரகாலநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் 18 இடங்களில் ஏற்பட்டுள்ள இந்த காட்டுத்தீயானது பலத்த காற்று மற்றும் வெப்பமான அலைகளை தோற்றுவிக்கின்ற நிலையில் தீயணைப்பு வீரர்கள், வனவியல் சேவை பணியாளர்கள் மற்றும் இராணுவத்தினர் என பெருமளவானோர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக போராடி வருகின்றனர்.

தேசிய அவசரநிலை அலுவலக தகவல்களின் பிரகாரம் சுமார் 40 வீடுகள் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை சுற்றுப்புறங்களில் சுமார் 50 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாகவும் இந்த காட்டுத்தீயானது Pumanque மற்றும் அதனை சுற்றியுள்ள 24 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பை அழித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தீயால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பேரழிவு மண்டலமாக பிரகடனப்படுத்துவதுடன் அவசரகால நிலையை அறிவிப்பதாக சிலி ஜனாதிபதி மிச்சேல் பசிலேற் டுவிட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார். (இ-7)

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக 670 இடங்களில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக உலகம் முழுவதும் பெண்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை பதவி ஏற்றார். அவர் பதவி ஏற்பதற்கு முன்பே எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் நடந்தன.

ட்ரம்ப் பெண்களுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து இருந்ததாக தேர்தல் பிரசாரத்தின் போது கூறப்பட்டது. அதற்கு அவர் மறுப்பு தெரிவித்தார்.

இந்த நிலையில் அவர் பதவி ஏற்ற பிறகு அமெரிக்கா மற்றும் உலக நாடுகளில் நேற்று முன்தினம் பெண்கள் போராட்டம் நடத்தினர். ட்ரம்ப் ஆட்சியில் பெண்களின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதாக அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் நடந்த பெணகள் பேரணியை நடிகர் பெர்ரா தொடக்கி வைத்தார்.

அவர் பேசும் போது, ஒவ்வொரு பெண்ணும் ட்ரம்பின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். அவர் பதவி ஏற்ற தலைநகர் பகுதி உட்பட நாட்டின் அனைத்து இடங்களிலும் போராட்டம் நடத்துகின்றனர். எங்களால் ட்ரம்பை ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

போராட்டத்தில் பங்கேற்ற பெண்கள் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்தனர். அவர்கள் ட்ரம்புக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள். வோஷிங்டனில் நடந்த பேரணியில் 5 இலட்சம் பேர் கலந்து கொண்டனர்.

அதேபோன்று அமெரிக்காவில் சிகாகோ தெருக்களில் நடந்த பேரணியில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் ஈடுபட்டனர்.

லொஸ்ஏஞ்சல்ஸ், நியூயோர்க், சீட்டில், பாஸ்டன் மற்றும் மியாமி உள்ளிட்ட 300 இடங்களில் போராட்டம் நடந்தது.



அதில் கலந்து கொண்ட ஏராளமான பெண்கள் கருஞ்சிவப்பு நிற பூனை வடிவ தொப்பிகளை அணிந்து இருந்தனர்.

அதேபோன்று இங்கிலாந்தில் லண்டனில் பெண்கள் போராட்டம் மற்றும் பேரணி நடத்தினர். அங்கு சுமார் ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டனர்.

மேலும் அங்கு பெல்பாஸ்ட், கார்டிப், எடின்பேர்க், லீட்ஸ், ஸிவர்பூல், மான்செஸடர், பிரிஸ்டல் உள்ளிட்ட நகரங்களில் இப்போராட்டம் நடத்தப்பட்டது.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திலும் ட்ரம்புக்கு எதிரான போராட்டத்தில் பெண்கள் ஈடுபட்டனர். சிட்னியில் நடந்த போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நைரோபி, கென்யா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் அமெரிக்க தூதரகங்கள் முன்பு பெண்கள் பேரணியாக சென்று ட்ரம்புக்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

பார்சிலோனா, ரோம், ஆம்ஸ்டர்டாம், ஜெனீவா, புடாபெஸ்ட், பிராகுவே உள்ளிட்ட ஐரோப்பிய நகரங்களிலும் ட்ரம்புக்கு எதிரான பெண்கள் போராட்டம் வெடித்தது. ட்ரம்புக்கு எதிராக அமெரிக்கா உட்பட உலக நாடுகளில் 670 இடங்களில் போராட்டம் நடைபெற்றது. (இ-7)








கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பொங்கல் விழா கடந்த 17ஆம் திகதி புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரியில் இடம்பெற்றது. யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, சிறப்பு விருந்தினர்க கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வர் ச.லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள் என்பனவும் இடம்பெற்றன.



வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் "வாழ்வின் எழுச்சி பசுமைப்பூங்கா" வேலைத்திட்டத்தின் கீழ் மரநடுகை நிகழ்வு, கோப்பாய் மத்தி கிரர்ம அலுவலர் பிரிவில் கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய சூழலில் பிரதேச செயலர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வில் வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளர், ஆலய பிரதமகுரு, வாழ்வின் எழுச்சி முகாமையாளர், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி பயனாளிகள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் தைப்பெங்கல் விழா அண்மையில் யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ப.செந்தில் நந்தனன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலாசார பேரவை உறுப்பினர்கள், காலாசார உத்தியோகத்தர்கள், செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி பி.எம். கமாலும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜ.பி.விமலவீரவும் இணைந்து வீதிப் போக்குவரத்துக்கான விழிப்புணர்வு நடவடக்கையை கடந்த 19ஆம் திகதி நெல்லியடி மகா வித்தியாலயத்தில் மேற்கொண்ட போது...



ஊர்காவற்றுறை பிரதேசத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பொது அமைப்புக்களுக்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியினரால் தளபாடங்கள், வாத்தியக் கருவிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. இவ் உபகரணங்களை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மா்வட்ட நிர்வாக செயலாளர் வேலும் மயிலும் குகேந்திரன் (வி.கே. ஜெகன்) நிர்வாகத்தினரிடம் வழங்கி வைத்தார்.



மக்கள் திலகம், பொன்மனச் செம்மல். தமிழக முன்னாள் முதல்வர் முனைவர் எம்.ஜி.ஆரின் 100ஆவது பிறந்த நாள் அண்மையில் வடமாகாண எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத்தலைவர் வ.இ.செல்வக்குமார் தலைமையில் பண்டத்தரிப்பு அமெரிக்கன் இலங்கை மிசன் ஆலய திருச்சபை வளாகத்தில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர். எஸ்.பகீர்தன் மற்றும் வீணாகான பா.வாசுதேவர்குருக்கள் திருச்சபை (பண்டத்தரிப்பு டெய்சி) ஆசிர்வாதம் கிராம சேவையாளர் சில்லாலை J/148 பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். எம்.ஜி.ஆர். மன்றத்தால் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளான 60KM ஈருருளி ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தால் நடைபெற்ற தாச்சி போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

# லசந்தவின் படுகொலைக்கு கோத்தபாயவே காரணம்

## பொன்சேகா வாக்குமூலம்



(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டும் என்று அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கடந்த வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஐந்து மணிநேரம் விசாரணை நடத்தினர்.

இவ்விசாரணை 5 மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

இதன்போது, இந்தப் படுகொலை தொடர்பாக கோத்தபாய ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், போரின் இறுதிக் கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு அழைக்கப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் குழுவொன்றினால் மேற்கொளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தகவல்களை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்பட்ட இந்தக் குழுவினர், எந்தெந்த முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்டு எங்கிருந்து செயற்பட வைக்கப்பட்டனர் என்பது பற்றிய விபரங்களையும் சரத் பொன் சேகா வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-3-5)

# ஐ.தே.கவுக்கு சலாம்போட சு.க.தயாரில்லை - டிலான்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பயணிக்க முடியாவிடின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கும் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். இதற்காக வேண்டி எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக அவர் கூறியுள்ளார்.

பதுளை கொட்டகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத தெரிவித்தார்.

கூட்டரசாங்கத்தில் இருந்தாலும் ஐக்கிய தேசியக கட்சிக்கு தேவையான மாதிரி செயற்பட தாம் தயாரில்லையெனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-3)

# அமெரிக்காவின் 'நாசகாரி' கப்பலில் இலங்.கடற்படையினருக்கு பயிற்சி





கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ள யு.எஸ்.எஸ். ஹொப்பர் என்ற அமெரிக்க கடற்படையின் ஏவுகணை நாசகாரி கப்பலில், இலங்கை கடற்படையினருக்கு நேற்று முன்தினம் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இலங்கை கடற்படையின் சிறப்பு அணி ஒன்று நேற்று முன்தினம் யு.எஸ்.எஸ். ஹொப்பருக்குச் சென்று அமெரிக்க கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

கப்பல்களுக்குள் நுழைந்து தேடுதல்களை நடத்துதல் மற்றும் கப்பல்கள், ஆயுதங்கள் மற்றும் ஆட்களை கைப்பற்றும் உத்திகள் தொடர்பாகவே இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்கப் படையினர் பயிற்சி களை அளித்தனர். கடந்த 19ஆம்திகதி கொழும்பு துறைமுகம் வந்த யு.எஸ். எஸ்.ஹொப்பர் நாளை புறப் பட்டுச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-5)

# எண்ணெய்க் குதங்கள் விவகாரம் இந்தியா மறுப்பு;இலங்கை அமைப்பு

(கொழும்பு)

சீனக்குடா எண்ணெய் குதங்களை இந்திய எண்ணெய் நிறுவனம் வழங்க மறுத்து வருவதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு பில்லியன் ரூபா செலவில் நான்கு எண்ணெய தாங்கிகளை அவசரமாக அமைக்கவுள்ளது.

வரட்சியை எதிர்கொள்வதற்காக மின்சார உற்பத்திக்குத் தேவைப்படும் எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு, இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் உள்ள சீனக்குடா எண்ணெய்க் குதங்களில் மூன்றை மீளப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

இதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருந்த போதும், இந்திய எண்ணெய் நிறுவன அதிகாரிகள், எண்ணெய்க் குதங்களை மீள வழங்க மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் அடுத்த வாரம் புதிய இந்தியத் தூதுவர் பொறுப்பேற்கும் வரை இதுதொடர்பான நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க இலங்கை பிரதமர் உத்தர விட்டுள்ளார்.

எனினும், மின்சார உற்பத்திக்குத் தேவைப்படும் டீசலை சேமித்து வைப்பதற்கு தாங்கிகள் அவசரமாகத் தேவைப்படுவதால், முத்துராஜவெலவில் நான்கு தாங்கிகளை அமைக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

முதலாவது எண்ணெய் தாங்கியை அமைப்பதற்கு கோரப்பட்ட கேள்விப்பத்திரம் மூடப்பட்டுள்ளது. இதற்கு 400 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தாங்கிகள் ஒவ்வொன்றும் 15 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை சேமித்து வைக்கக் கூடிய வகையில் அமைக்கப்படவுள்ளன.

மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை வாங்கி வந்த மின்சார சபை, இந்த மாதம் மேலதிகமாக 60 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை வழங்குமாறு கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இன்று ஒரு தகவல்

## தானதர்மம் செய்வதுண்டா?

ஒரு திருமணத்தில் கலந்துகொண்டு விட்டு நண்பருடன் வெளியே வந்தேன். வயதான ஓர் அம்மா பத்து ரூபாய் கொடுங்களேன் என்று அவரே எல்லை வரையறுத்துக் கேட்டார். மறுத்தபடி நடந்தேன். அந்த அம்மாவோ விடுவதாக இல்லை. கடைசியில் என்கையில் இருந்த தாம்பூலப் பையைக் கொடுத்து அனுப்பினேன். நண்பர் ஐயோ....ஐயோ! என்ன இது, அக்கிரமமாக இருக்கே! சாத்துக்குடி இப்ப விக்கிற விலை தெரியுமா? ஒரு ரூபாய் கொடுக்காம சாத்துக்குடியைப் போய்க் குடுக்கிறீங்களே (மடையா?) என்றார்.

காசு கொடுப்பது என்பது பிச்சை. நான் செய்தது பிச்சையல்ல,தானம் என்றேன் நண்பர் மௌனியானார்.

யாசகர்களை ஊக்குவிக்காதீர்கள் எனும் அரசின் கொள்கைதான் என் கொள்கையும். எவ்வளவு பரிதாபமாகக் கெஞ்சினாலும் சரி, என்னிடம் ஒரு சதம்கூட நகராது. காரணம் அவர்களை மேலும் சோம்பேறி ஆக்கிச் செய்ய வேண்டிய கடமைகளையும் நாம் தடுத்தவர்களாக ஆகிவிடுகிறோம் என்று உணர்ந்திருப்பதுதான்.

ஆனால், ஆத்ம திருப்திக்காக நாம் சில உதவிகளைச் செய்தே ஆக வேண்டும். சிலபேர் பக்தி சமாச்சாரங்களுக்கு மட்டுமே தர்மம் செய் வார்கள். ஓர் ஏழையின் படிப்புச் செலவை ஏற்கமாட்டார்கள். வீட்டு வேலைக்காரன் கிழிந்த பனியனோடு திரிவான். பத்து ரூபாய் கொடுத்து இந்தா புதுசு வாங்கிக்கொள் என்று சொல்ல மனம் வராது.

சிலபேர் சௌகரியங்களை அனுபவிப்பதற்கென்றேயும் சிலபேர் கஷ்டங்களை அனுபவிப்பதற்கென்றேயும் பிறந்திருக்கிறார்கள். இதை மாற்றவே முடியாது. ஆனால் ஒரு மாறுதலுக்காகச் சிறுசிறு சௌகரியங்களைச் செய்து கொடுத்துவிட்டுக் கொடுத்து உதவலாம். உதவ வேண்டும்.

தனக்கு மிஞ்சினால்தான் தானம் என்பார்கள். அவரவர்கள் தங்கள் சக்திக்கு ஏற்ப சிறுசிறு உதவிகளைச் செய்ய வேண்டும்.

ஒரு சிறு தொகையை சேமிப்பாக நினைத்துக் கொண்டு வங்கியில் கட்டி அதில் வரும் வட்டித் தொகையை மட்டுமாவது நல்ல காரியங்களுக்குச் செலவிடலாம். வெளியாருக்குக் கொடுக்க மனம் வராவிட்டாலும் வேலை செய்பவர்களுக்கு உதவியாகவும் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்குப் பரிசு எனும் வடிவிலும் கொடுத்து நம்மைச் சுற்றிய அந்தச் சிறு உலகத்தை மிக இனியதாக ஆக்கிக் கொள்ள முடியும். இதில் கிடைக்கக் கூடிய மன நிறைவு வேறு எதிலும் கிடைக்காது.

லேனா தமிழ்வாணன்

# மைசூர் முதல் ‘81 போயஸ் கார்டன்’ வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புகள்






“காலத்துக்கு ஏற்றவாறு என்னை வடிவமைத்துக் கொண்டிருக்கிறேன். நான் முதிர்ச்சி அடைந்திருக்கிறேன். என் வாழ்க்கையில், பல இன்னல்களை சந்தித்து இருக்கிறேன் அதனைக் கடந்து வந்திருக்கிறேன். யோசித்துப்பார்த்தால், அந்தப் பிரச்சினைகள்தான் என் ஆளுமையை வடிவமைத்து இருக்கிறது.” - இது நம்பிக்கை வாக்கெடுப்பில் வாஜ்பாய் அரசு தோல்வியுற்ற சமயத்தில், ஜெயலலிதா ஒரு ஆங்கில இணைய இதழுக்கு கொடுத்த நேர்காணல். இதன ஒரு பகுதி நிச்சயம் உண்மைதான். சந்தோச தருணங்களால்மட்டுமே ஒரு மனிதனின் ஆளுமை வடிவமைக்கப்படுவதில்லை தானே? ஒரு மனிதன் தான் சந்தித்த மனிதர்கள், படித்த புத்தகம், புரிந்துகொண்ட அரசியல்... இதைத்தானே தன் மொழியில் வெளிப்படுத்துகிறான். ஜெயலலிதாவும் அப்படித்தான்... தான் சந்தித்த துரோகங்களை, அவமானங்களை தன் மொழியில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். ஜெயலலிதாவின் செயல்களை விமர்சிக்கலாம். ஆனால், உண்மையாக அவரைப் புரிந்து கொள்ள விரும்பினால், அவரது செயலகளை ஆய்வுக்கு உட்படுத்துவது மட்டும் போதாது. அவரது வாழ்க்கை அனுபவத்தையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இது ஜெயலலிதாவுக்கு மட்டும் அல்ல... எல்லா மனிதர்களுக்கும் பொருந்தும்.

சரி, நாம் விடயத்துக்கு வருவோம். தமிழக சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. கட்சியைக் கைப்பற்றியது... 10ஆவது சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது... மத்தியில் சிலகாலம் சர்வ அதிகாரத்துடன் இருந்தது... இப்போது 10 எம்.பிக்களை வைத்திருப்பது என எதுவும் முக்கியம்' அல்ல. இந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும். “இப்போது விழுந்தால், பின் எப்போதும் எழவே முடியாது” என்பதை நன்கு உணர்ந்திருந்தார் ஜெயலலிதா. “கட்சி உயிர் பெற வெற்றி வேண்டும். நான் இன்னும் வலிமையுடன் தான் இருக்கிறேன் என்பதை நிரூபிக்க வெற்றி வேண்டும்” என்று யோசித்த ஜெயலலிதா அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்தார். கூட்டணி அமைத்தார். காங்கிரஸ், தமிழ் மாநிலக் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இடதுசாரிகள்... என மாபெரும் கூட்டணி அது. கருணாநிதி கூட்டணியில் அப்போது பா.ஜ.கவைத் தவிர இருந்தவை எல்லாம் சிறு கட்சிகள். பெருமபாலான மக்களுக்கு பெரிதாக அறிமுகமாகாத கட்சிகள். கூட்டணி எல்லாம் ஜெயலலிதாவுக்கு சாதகமாக அமைந்துவிட்டதுதான்... ஆனால், டான்சி வழக்கின் தீர்ப்பு இருக்கிறதே? “இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற ஒருவர் தேர்தலில் நிற்க முடியாது” என்கிறது மக்கள் பிரதிநித்துவச் சட்டம். டான்சி வழக்கில் ஜெயலலிதாவுக்கு மூன்று ஆண்டுகள் தண்டனை. இதன் காரணமாக அவர் போட்டியிட முடியுமா, முடியாதா? என்ற சந்தேகம் நிலவியது. சூழ்நிலை இப்படியாக இருக்க... ஆண்டிப்பட்டி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, புவனகிரி என நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார் ஜெயலலிதா. ஆனால், தேர்தல் அதிகாரிகள் ஒவ்வொரு வேட்புமனுவாக நிராகரித்தனர்.

**“நான் உங்களிடம் பிச்சை கேட்கிறேன்”**

ஜெயலலிதா இதுகுறித்து கவலைப்பட்டாரா இல்லையா என்றெல்லாம் தெரியவில்லை. ஆனால், வெற்றிகரமாக இதையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஊர் ஊராக சென்றார். மக்களை சந்தித்தார். அவர் தன் கட்சியின் கொள்கைகள் குறித்துப் பேசவில்லை. தான் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு என்ன செய்வோம் என்பது குறித்துப் பேசவில்லை... தமிழகத்தில், தற்போது நிலவும் பிரச்சினைகள் குறித்தும் பேசவில்லை... தன்னைப் பற்றி மட்டும் தான் பேசினார். முழுக்க முழுக்க தன்னை மட்டுமே பிரதானப் படுத்தினார். கருணாநிதி தன்னை அழிக்கத் திட்டமிடுகிறார் என்றார். தன் மீது போடப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் புனையப்பட்ட வழக்குகள் என்றார். அரசியல் சூழ்ச்சியால் தன் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்றார். தனக்கு அநீதி இழைக்கப்படுகிறது நியாயம் வேண்டும் என்றார். முத்தாய்ப்பாக அவர், “மற்ற தீர்ப்புகள் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப்போகட்டும். எனக்கு உங்கள் தீர்ப்புதான் முக்கியம். நீங்கள் சரியான தீர்ப்பை வழங்குவீர்களா? நான் உங்களிடம் பிச்சை கேட்கிறேன். நீங்கள் சரியான தீர்ப்பை வழங்குவீர்களா.?” என்றார். கூட்டம் சில நொடிகள் நிசப்தம் ஆனது. பின் கண்ணீருடன் கரகோஷம் எழுப்பியது.

## ‘ஊழலுக்கு வயது வித்தியாசம் பார்க்க வேண்டியதில்லை’



சொல்லப்போனால்... அப்போது கருணாநிதி ஆட்சியில், பெரிய அதிருப்தி எல்லாம இல்லை. பெரிதாக எந்த ஊழல் குற்றச்சாட்டுகளிலும் சிக்கவும் இல்லை. ஆனால் இது எதுவும் கருணாநிதிக்கு கை கொடுக்கவில்லை. ஆம், ஜெயலலிதா அமைத்த பெருங்கூட்டணி மற்றும் ஜெயலலிதாவின் பிரசாரம் முன் ஈடுகொடுக்க முடியாமல் திணறிய தி.மு.க., இறுதியில் படுதோல்வி அடைந்தது. அ.தி.மு.க மட்டும் 132 இடங்களைக் கைப்பற்றியது. தி.மு.க. கூட்டணி மொத்தமாகக் கைப்பற்றிய இடங்கள் 37. இது உண்மையில், ஜெயலலிதாவே எதிர்பாராத வெற்றி தான்.

ஜெயலலிதா வழக்கம் போல் அ.தி.மு.க. கூட்டணியின் வெற்றியை, ஜெயலலிதா தன் வெற்றியாக மட்டுமே



பார்த்தார். தான் அரசாள மக்கள் விரும்புகிறார்கள். அதனால்தான் இத்தகைய அமோக வெற்றியை மக்கள் பரிசளித்திருக்கிறார்கள் என்று நம்பினார். அப்போது ஆளுநராக இருந்த ஃபாத்திமா பீவி, ஜெயலலிதாவை அரசமைக்க அழைத்தார். இது அந்த சமயத்தில், சர்ச்சையைக் கிளப்பியது. “சட்டமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவரை, மூன்று ஆணடுகள் சிறைத்தண்டனை பெற்ற ஒருவரை எப்படி ஆட்சி அமைக்க அழைக்கலாம்?” என்ற எதிர்ப்புக் குரல் எழுந்தது. ஃபாத்திமா பீவி இதனையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. யாரை வேண்டுமானாலும் அரசமைக்க அழைக்கும் அதிகாரத்தை அரசியலமைப்புச் சட்டம் அங்கம் 164 ஆளுநருக்கு வழாங்கி இருக்கிறது. அவர் ஜெயலலிதாவை அழைத்தார்... ஜெயலலிதா முதல்வராக பொறுப்பேற்றார்!

**“பழிவாங்கும் படலம்”**

இது ஜெயலலிதாவின் முறை. இதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தார். தேர்தல் பிரசாரத்தின்போதே, தன்னை முதன்மைப்படுத்தியவருக்கு... ஆட்சி, அதிகாரங்கள் கிடைத்ததும் வேறு ஏதாவது முதன்மையாக இருக்குமா என்ன? ஆட்சி பொறுபேற்ற ஒரு மாத காலத்துக்குள் தன் ஆட்டத்தைத் தொடங்கினார். ஜூன் 30, 2001 நள்ளிரவு கருணாநிதியை மேம்பால ஊழல் வழக்கில் கைது செய்ய பொலிஸ் துறையினர் அவர் இல்லத்துக்கு வந்தனர். அப்போது மணி நள்ளிரவைத் தாண்டிவிட்டது. கருணாநிதி தகவல் அறிந்ததும் முரசொலி மாறனுக்கு தொலைபேசியில் பேசினார். சில நிமிடங்களில் மாறன், கருணாநிதி வீட்டுக்கு வந்தார் கூடவே தொலைக்காட்சி நிருபர்களும். கருணாநிதி மிக மோசமான முறையில் கைது செய்யப்பட்டார்.

“78 வயதான மூத்த அரசியல்வாதியை ஆடை மாற்றக்கூட அனுமதிக்கவில்லை. வயதானவர் என்று கூட பார்க்காமல், மிகவும் மோசமான முறையில் பொலிஸ் துறை அவரைக் கையாண்டது” என்று அடுத்த நாள் அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்டது. குறிப்பாக “அய்யோ... என்னைக் கொலை செய்யுறாங்க...



கொலை செய்யுறாங்க...” என கருணாநிதி கதறும் காட்சி தொலைக்காட்சிகளில் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பப்பட்டது.

இந்தக் கைது நடவடிக்கையை அப்போது அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த கட்சிகளே ரசிக்கவில்லை. தேர்தலுக்குப் பின், அதிகரித்துப்போன ஜெயலலிதாவின் எதேச்சதிகாரம், கூட்டணித் தலைவர்களை மதிக்காத போக்கினால் அதிருப்தியில் இருந்தனர் அவர்கள். எனவே, அவர்களும் இந்தக் கைது நடவடிக்கையைக் கண்டித்தனர்.

ஜெயலலிதா இதுகுறித்தெல்லாம் அணு அளவும் கவலை கொள்ளவில்லை. தமிழகமே அல்லோலப்பட்டுக் கொண்டிருக்க... ஜூலை 7ஆம் தேதி, சசிகலாவுடன் குருவாயூர் பயணமானார். அங்கு ஏறத்தாழ 40 நிமிடங்கள் கலங்கிய கண்களுடன் குருவாயூரப்பனைத் தரிசித்துவிட்டு ஹெலிகொப்டரில் சென்னை திரும்பினார்.

நாட்கள் நகர்ந்தன... ஆனால், கருணாநிதி கைது அல்லது அவரை கைது செய்த விதம் ஏற்படுத்திய அதிர்வலை சில நாட்களுக்கு அப்படியேதான் இருந்தன. இது மட்டும்தான் தமிழகத்தின் பேசு பொருளாக இருந்தது. ஆனால், இது குறித்தெல்லாம் ஜெயலலிதா கவலை கொள்ளவில்லை. சில ஆண்டுகளுக்கு பின் அவர் அளித்த பேட்டி ஒன்றில், கருணாநிதி கைது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவர் இவ்வாறாகப் பதில் அளித்தார். “ஊழல் செய்தவருக்கு வயது வித்தியாசம் பார்க்க வேணடிய அவசியம் இல்லை. அவர் ஊழல் செய்திருக்கிறார். குற்றவாளியாகத் தான் பார்க்க வேண்டும்” என்று கோபமாகவே அந்தக் கேள்வியைக் கடந்து சென்றார்.

(தொடரும்)

# அரசாங்கம் மலையக மக்களின் நலனில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது

## ஜனாதிபதி தெரிவிப்பு

மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களின் சேமநலன்களுக்காக மேற்கொள்ளக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

விசேடமாக மலையக பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேயிலைத் தொழிற்றுறை உள்ளிட்ட பெருந்தோட்டத் துறை, விவசாயத்துறை, சுகாதாரம் மற்றும் கடற்றொழில் உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் ஆய்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் மானியம் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.



நாட்டில் தேயிலை தொழில்துறை ஆரம்பிக்கப்பட்டு 150 வருடங்கள் நிறைவடைந்தமை மற்றும் தலவாக்கலை சென்கூம்ஸ் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு 92 வருடங்கள் நிறைவடைந்துள்ளது. இவற்றை முன்னிட்டு ஆய்வு நிலையத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வைபவத்தில் ஜனாதிபதி உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# ஜனாதிபதியிடம் சஜித் முறைப்பாடு

2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பில், வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக தமது அமைச்சிற்கு 600 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது எனவும்பின்னர்அந்தத் தொகை தமக்கு அறிவிக்காமலேயே குறைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் முறையிட்டுள்ளார்.

அத்துடன், 600 கோடி ரூபா பணத்தில் 200 கோடி ரூபா மட்டுமே தமக்கு எஞ்சியுள்ளதாகவும் 400 கோடி ரூபா வேறு அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, 200 கோடி ரூபா வடக்கு அபிவிருத்தி அமைச்சிற்கும் 200 கோடி ரூபா தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமக்கு எவ்வித அறிவிப்பும் வழங்காது இவ்வாறு அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வேறு அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.



குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

மேலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் நாடு திரும்பியதும் இந்த விடயமாக பேசித் தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி அமைச்சர் சஜித்திற்கு தெரிவித்துள்ளார். (இ-3)

# சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் புதிய கட்சியில் இணைவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கமான ஸ்ரீலங்கா சட்டத்தரணிகள் சங்கம் புதிய கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் முழுமையாக இணைந்து கொண்டுள்ளது.

கொழும்பில் உள்ள உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சட்டத் தரணிகள் சங்கத்தை ஸ்தாபிக்கும் நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திர சட்டத்தரணிகள் சங்கத்தில் அங்கம் வகித்த 600 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வின் போது புதிய சங்கத்தின் தலைவராக டபிள்யூ. தயாரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திர சட்டத்தரணிகள் ஒழுங்கு செய்த கூட்டத்தில் இப்படி பெருமளவிலான சட்டத்தரணிகள் ஒருபோதும் கலந்து கொள்ளவில்லை என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

# நீர் விநியோக பௌசர் கொள்வனவுக்கு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

வரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்களுக்கு நீரை விநியோகிப்பதற்காக பௌசர்களைக் கொள்வனவு செய்வதற்கு திறைசேரி 5 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக தேசிய இடர்நிவாரண சேவை மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பத்திராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

380 பௌசர்கள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலாளர்களுடன் இணைந்து அந்த மாவட்டங்களுக்குத் தேவையானவற்றை கண்டறியுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தேவையான குடிநீரை விநியோகிப்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமீபத்தில் மாவட்ட செயலாளர்களுடனான சந்திப்பின் போது இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கியிருந்தார்.

தேவைக்கு அமைய எதிர்காலத்தில் இரண்டாயிரம் நீர் தாங்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இந்த தேசிய பணியில் முப்படையினர் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 966

**செரின்**

ஒரு தாய் தன் பிள்ளைகளை பெறுவதற்காக அழலாம்... ஆனால் பெற்றதற்காக அழக்கூடாது...

**கரீன்**




**சச்சின்**




**கனிஸ்ரா**




**கலை**




**நிதின்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொடரும் நீதிக்கான தேடல்

# இலங்கை எதிர்கொள்ளும் சிக்கல்

அனைத்துலக மட்டத்தில் பெரியளவில் தெரியப்படுத்தப்படாவிட்டாலும் கூட, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை மிகப் பாரிய அரசியல் அதிகாரத்துவ ஆட்சியைக் கொண்டிருந்தது. ஜனவரி 2015இல், நாட்டின் அதிகாரத்துவ கடும்போக்கு ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

இதன் மூலம் மூன்றாவது தடவையாகவும் நாட்டின் ஜனாதிபதியாகலாம் என்ற இவரது கனவு சிதைவடைந்தது. இத்தேர்தல் மூலம் இந்த நாடானது ஜனநாயக மற்றும் அரசியல் மறுமலர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் என்கின்ற நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது.

எனினும், இந்தப் பயணமானது சவால் மிக்கதாகவும் காணப்படுகிறது. அத்துடன் தற்போதைய அரசியல் நிலைப்பாடானது இனிவரும் மாதங்களில் இந்த நாட்டின் அரசியல் எவ்வாறானதாக இருக்கும் என்பதைச் சுட்டி நிற்கிறது.

நாட்டின் அரசியல் மாற்றத்திற்கு இடைக்கால நீதி என்பது குறிப்பிடத்தக்கதோர் பங்காகக் காணப்படுகிறது. கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக தற்போதைய அரசாங்கமானது இதய சுத்தியுடன் தீவிரமாக செயற்படாவிட்டால் நாட்டில் அரசியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியாது.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசாங்கமானது தற்போதும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொறுப்புக்கூறலை மேற்கொள்ளவில்லை.

1983 தொடக்கம் 2009 வரையான உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், இலங்கை அரசாங்கப் படைகள், தமிழ்ப் புலிகளுக்கு எதிராக பல்வேறு சண்டைகளை முன்னெடுத்தனர். புலிகள் அமைப்பின் மூத்த தலைமைத்துவம் அழிக்கப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்துடன் இந்த உள்நாட்டுப் போர் முடிவிற்கு வந்தது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 40,000 வரையான உயிர்கள் காவுகொள்ளப்பட்டதாக நம்பகமான தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இதில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் மக்களாவர்.

2015 ஒக்ரோபர் மாதம் இலங்கை அரசாங்கத்தின் இணை ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை மீதான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானமானது பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கம் போன்ற பல்வேறு விடயங்களை வலியுறுத்தியிருந்தது. குறிப்பாக வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய அனைத்துலகப் பங்களிப்புடனான பொறுப்புக்கூறல் பொறிமுறையை இலங்கை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.


இவ்வாறான பல்வேறு விடயங்களை இலங்கை அரசாங்கம் இன்னமும் நிறைவேற்றவில்லை. இலங்கை ஜனாதிபதி ஜூன் மாதம் வழங்கிய நேர்காணல் ஒன்றில், வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை எனத் தெரிவித்திருந்தார். 'அவ்வாறு தேவைப்பட்டால் நாங்கள் வெளிநாட்டு தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்வோம். எந்தவொரு அர்ப்பணிப்போ அல்லது நிபந்தனைகளோ இன்றியே இந்த உதவி பெற்றுக் கொள்ளப்படும்' என இலங்கை ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் ஒரு மாதம் கழித்து இலங்கையின் பொறுப்புக்கூறல் பொறிமுறையில் எந்தவொரு அனைத்துலகப் பங்களிப்பும் இருக்காது என மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியிருந்தார்.

வேறு சில நிகழ்வுகளில் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பை முதன்மைப்படுத்துவதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். 'எந்தவொரு போர்க்கதாநாயகர்களும் ஆதரவற்றவர்களாக மாறுவதற்கு நான் வழிவகுக்கமாட்டேன்' என கடந்த ஜூன் மாதம் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இதேபோன்றே பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகளும் பொருத்தமற்ற வகையில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.



பொறுப்புக்கூறல் என்பது சில காரணங்களைப் பொறுத்தளவில் மிகப்பாரியதொரு விடயமாகும். இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் இன்னமும் பணியாற்றத் தொடங்கவில்லை. அதாவது அனைத்துலக சமூகத்தின் அழுத்தத்திலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்கு கொழும்பானது பொறுப்புக்கூறலை மேற்கொள்ள வேண்டும்.




இரண்டாவதாக, அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படும் மாற்று நீதி நிகழ்ச்சிநிரல் என்பது மிகப் பாரியதொரு சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது.

மூன்றாவதாக, இந்த நாடானது மீண்டுமொரு யுத்தத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

இறுதியாக இலங்கையில் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாக நீண்ட காலமாக ஒடுக்கப்படும் தமிழ் சமூகமானது நீதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

கொழும்பானது தற்போது தனது பொறுப்புக்கூறல் பொறிமுறையைத் தாமதித்து வருவது போல் தெரிகிறது. இதன் ஒரு அங்கமாக தற்போது அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பை, இலங்கை ஜனாதிபதி தொடர்பு கொண்டு பேசியிருந்தார். அதாவது போர்க்கால குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பாக அனைத்துலக சமூகத்தால் இலங்கை மீது இடப்படும் அழுத்தத்திலிருந்து தனது அரசாங்கத்தை விடுவித்துக் கொள்வதற்காகவே டொனால்ட் ட்ரம்புடன் மைத்திரிபால சிறிசேன தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தார்.

இதற்கும் அப்பால், பொறுப்புக்கூறல் தொடர்பில் தான் தீவிரம் காண்பிக்கவில்லை என மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். இலங்கை அரசாங்கமானது தனது நிலைமாறு நீதிச் செயற்பாட்டிற்கு நிலையான அனைத்துலக சமூகத்தின் உதவியை நாடுவதற்கான சிறந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது.

இலங்கையின் நீதிச் செயற்பாட்டில் அனைத்துலக சமூகம் பங்களிப்பதானது அரசியல் ரீதியாக உணர்ச்சி மிக்க விடயமாகும். எனினும், கணிசமான அனைத்துலக பங்களிப்பை உள்ளடக்காத எந்தவொரு நடவடிக்கை தொடர்பிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. பல பத்தாண்டுகால பாரபட்சங்கள் மற்றும் பல்வேறு உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் செயற்படுத்தப்பட்ட போதிலும் இவை தமிழ் சமூகத்திற்கு நன்மையளிக்கவில்லை. இதனால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள அதிகாரத்துவ அரசின் மீது ஆழமான அவநம்பிக்கையைக் கொண்டுள்ளது.

இலங்கையின் பெரும்பான்மை மக்கள் சமூகமாக தமிழ் மக்களும், தமிழ் மற்றும் முஸ்லீம்கள் இரு பெரும் சிறுபான்மை சமூகங்களாகவும் உள்ளனர். இலங்கை இராணுவத்தினர் மீது அவர்களால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அனைத்துலக சமூகம் தனது அழுத்தத்தை வழங்கியுள்ள அதேவேளையில், இலங்கையில் இந்தச் சூழலானது முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. (தொடர்ச்சி 20ஆம்பக்கம் பார்க்க...)

# யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி

## 27, 28, 29ஆம் திகதிகளில்

வடக்கில் இடம்பெறும் மாபெரும் வர்த்தக சந்தை மற்றும் சர்வதேச கண்காட்சி நிகழ்வு எதிர்வரும் 27,28 மற்றும் 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் வட பிராந்தியம், தொடர்ந்து 8ஆவது ஆண்டாக, மீண்டும் ஒருமுறை யாழ் சர்வதேச வர்த்தகச் சந்தை (JITF 2017) நிகழ்வை வரவேற்பதற்குத் தயாராகி வருகின்றது. இந்த மாபெரும் நிகழ்வானது மிகப் பாரிய கண்காட்சி மற்றும் நுகர்வோர் சந்தை நிகழ்வாக வடக்கிலுள்ள மக்களால் கருதப்படுகின்றது. இக்கண்காட்சி நிகழ்வு, எதிர்வரும் ஜனவரி 27 முதல் 29 வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை யாழ் மாநகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் மாநகர சபை, இலங்கை மாநாட்டு பணியகம் மற்றும் சர்வதேச வர்த்தக சபை ஆகியவற்றின் ஆதரவுடன், யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம் மேளனத்துடன் இணைந்து லங்கா எக்ஸிபிசன் அன்ட் கென்பிறன்ஸ் சேவிஸ் பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தால் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரகம் மற்றும் தேசிய ஏற்றுமதி யாளர்கள் சம்மேளனம் ஆகியனவும் இதற்கு அங்கீகாரமளித்துள்ளன.

வடக்கிலுள்ள குடிமக்கள், வியாபாரிகள், வர்த்தர்கள் மற்றும தொழில்முயற்சியாளர்கள் என அனைவரும் தவறாது கட்டாயமாக கலந்துகொள்ள வேண்டிய ஒரு நிகழ்வாக இக்கண்காட்சி மாறியுள்ளதுடன், இது யாழ் மாநகர சபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது. பல்வேறுபட்ட தேவைகள் மற்றும் சேவைகளை ஈடுசெய்யும் வகையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச கண்காட்சிக் கூடங்கள் இந்த வர்த்தகச் சந்தையில் இடம்பெறவுள்ளன. 2016ஆம் ஆண்டில் இந்நிகழ்வைப் பார்வையிடுவதற்கு 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பரந்த அளவிலான முதலீட்டாளர்கள் மற்றும் குடிமக்கள் விசாலமான எண்ணிக்கையில் ஒன்றுகூடும் ஒரு தனித்துவமான நிகழ்வாக இது கருதப்படுகின்றது. இப்பிராந்தியத்தில் தற்போது இடம்பெற்றுவருகின்ற பாரியளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள், முன்னர் அமைந்திராத வகையில் இப்பிராந்தியத்தில் பல்வேறு முதலீடுகளுக்கான வாய்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது.

வாய்ப்புக்கள் மற்றும் முதலீடு தொடர்பில் பரிசீலிப்பதற் காக 75 பேரைக் கொண்ட இந் தியக் குழு ஒன்றும் விசேடமாக இதில் கலந்து கொள்ளவுள்ளது.

இக்குழுவின் வரவுக்கு இந்தியாவின் ASSOCHAM (இந்திய வர்த்தக இணை சம்மேளனம்) அனுசரணை வழங்குகின்றது.

உலகிலுள்ள பல்வேறு வியாபார மற்றும் வாழ்க்கை முறை நகரங்களுக்கு ஈடாக இப்பிராந்தியம் மாறுவதை உறுதிசெய்யும் வகையில் அரசாங்கத்தின் முயற்சிகளுடன் பிராந்தியங்கள், வீதிகள், மின்சாரம், பாலங்கள் மற்றும் ஏனைய பல கோணங்களில் தற்போது அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிர்மாணம், விருந்தோம்பல், உணவு, பான வகை மற்றும் பொதியிடல், மோட்டார் வாகனம், தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம், நிதியியல் சேவைகள், ஆடையணி மற்றும் புடவை, விவசாயம்,நுகர்வோர் உற்பத்திகள் மற்றும் பல தொழிற்துறைகள் மூன்று தினங்களாக இடம்பெறவுள்ள இக்கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வானது "வடக்கிற்கான நுழைவாயில்" என அழைக்கப்படுகின்றது. தெற்கு மற்றும் வடக்கிலுள்ள மக்களுக்கு இடையில் வர்த்தகரீதியாக இணைப்பை ஏற்படுத்துவதில் கூட்டு வியாபார முயற்சிகள், ஒன்றிணைவுகள், பாரியளவிலான கோரல்கள் போன்ற முன்னெடுப்புக்கள் நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

2017 ஆம் ஆண்டு கண்காட்சியின் போது அதற்கு இணையாக வேறு பல நிகழ்வுக ளையும் ஏககாலத்தில் நடத்துவதற்கு இதன் ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர். பிரபல இசைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் இசை நிகழ்ச்சிகள் 2 தினங்களாக இடம் பெறவுள்ளதுடன்,கண்காட்சிக்கு முன்னதாக வீதியுலா, சிறுவர்களுக்கான கொண்டாட்ட நிகழ்வு, பொழுதுபோக்கு பூங்கா மற்றும் பலவும் அதன் சிறப்பம்சங்களாகும்.

அனைத்து வர்த்தகத் தேவைகளையும் ஒரே இடத்திலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒருநிகழ்வாக இது அமைந்துள்ள நிலையில், இதற்கு அனுசரணை வழங்கி உதவுவதற்கு பல நிறுவனங்கள் முனவந்துள்ளன.

நிகழ்வின் இணை அனுசரணையாளராக எஸ்-லோன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமும், உத்தியோகபூர்வ தொலைதொடர்பாடல் பங்காளராக மொபிடெல் நிறுவனமும், உத்தியோகபூர்வ அழக்குக்கலை பராமரிப்பு பங்காளராக 4எவர் ஸ்கின் நச்சுரல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனமும், உத்தியோகபூர்வ காலணி பங்காளராக டி.சாம்சன் அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனமும், உத்தியோகபூர்வ பதனிடல் எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விநியோக பங்காளராக இன்டஸ்ரியல் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஃபப்ரிகேசுஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனமும், உத்தியோகபூர்வ சுகாதாரப் பராமரிப்பு பங்காளராக லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் வைத்தியசாலையும், உத்தியோகபூர்வ உள்ளக பங்காளராக ஜடியா இம்போர்ட்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனமும், உத்தியோகபூர்வ எந்திரங்கள் மற்றும் மின்வலு சாதனங்கள் பங்காளராக டீன் பிரதர்ஸ் இம்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனமும், உத்தியோகபூர்வ மின்வலு உற்பத்தி பங்காளராக ஸ்ரடஜிகல் ட்ரென்ட்ஸ் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனமும் செயற்படுகின்றன.

மேற்படி கண்காட்சியின் சிறப்பம்சங்களாவன,

- ❖ நுகர்வோரின் விருப்பத் தெரிவுகள் முதல் கைத்தொழில் உற்பத்திகள் வரை 300 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக்கூடங்கள்
- ❖ கண்காட்சிக்கு 60,000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருவர் என எதிர்பார்க்கப் படுகின்றது
- ❖ மாலைப்பொழுதில் நேரடி இசை நிகழ்ச்சிகள்
- ❖ சிறுவர்கள் விளையாடுவதற்கான ஏற்பாடுகள் அடங்கலாக பொழுதுபோக்கு பூங்கா
- ❖ அனைத்து வகையான உணவு மற்றும் பான வகை, நடைபாதை உணவுக்கூடங்கள்
- ❖ 1000 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு விசேட தள்ளுபடிகள்
- ❖ வியப்பூட் டும் பரிசுகளை வெல்வதற்கு ஒவ்வொரு மணித தியாலத்திலும் அதிர்ஷ்ட குலுக்கல் சீட்டிழுப்புக்கள்
- ❖ கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்
- ❖ விசேட உயர் கல்வி கண்காட்சிக்கூடம் என்பனவும் அமையவுள்ளன என கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# வாடிக்கையாளர்களிடம் யோசனை கேட்காதீர்கள்

தொழில் ரகசியம்

வாடிக்கையாளர் கூறுவதை கேட்காமலிருந்தால் தோல்வி நிச்சயம். வாடிக்கையாளர் கூறுவதை மட்டும் கேட்டுக்கொண்டிருந்தாலும் தோல்வி நிச்சயம்!

என்னடா, இத்தனை நாள் வாடிக்கையாளர் தெய்வம், வாங்குபவர் பேச்சைக் கேள், அவரை மண்டியிட்டு தொழு, மன்றாடி வேண்டு என்று மாங்கு மாங்கென்று சொன்னார்களே! என்று மிரள வேண்டாம். சந்தைப்படுத்தல் பாடத்திட்டம் மாறிவிட்டதோ என்று மலைக்க வேண்டாம். வாடிக்கையாளர் தெய்வம், தேவதை, ராஜா தான். அதில் மாற்றம் இல்லை.

ஆனால் புதிய பொருள் வகைகளை அறிமுகப்படுத்த விரும்பும் தொழிலதிபர்கள் வாடிக்கையாளர்களிடம் 'உங்களுக்கு என்ன புதிய பொருள் வேண்டும், எப்படி புதுமையாய் இருந்தால் வாங்குவீர்கள்' என்று கனகாரியமாக சென்று கேட்கிறார்கள். அப்படி கேட்டால்தான் புதிய பொருளுக்கு யோசனை கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். என்ன இருந்தாலும் பொருளை வாங்கப்போவது வாடிக்கையா ளர்தான், அவரிடமே கேட்பதுதானே முறை என்கிறார்கள்.

இது தப்பாட்டம். அப்படி கேட்பதனால் ஒரு பயனும் கிடைக்காது.

தாங்களுக்கு என்ன தேவை என்பது வாடிக்கையாளருக்குத் தெரிவதில்லை. இதுதான் நிதர்சன மான உண்மை. இதுவே சந்தைப்படுத்தல் யதார்த்தம். அவர்கள் தேவையை பூர்த்தி செய்யும் புதிய பொருள் அளிக்கப்படும் வரை அதன் தேவையை அவர்கள் அறிந்திருப்பதில்லை. யோசித்துப் பாருங்கள். துணிகளைத் துவைப்பதற்கு எளிதாக ஒரு இயந்திரம் தாருங்கள், அதில் துணியை வோஷிங் பவுடரோடு சேர்த்து போட்டால் அது இப்படியும் அப்படியும் சுற்றி முக்கால் மணி நேரத்தில் துணியை துவைத்து, பிழிந்து காயப்போட ரெடியாக தரவேண்டும் என்று வாடிக்கையாளர்களா கேட்டார்கள்?

ஆனால் வோஷிங் மெஷின் என்ற விடயம் அவர்களுக்கு தேவைப்பட்டது. துணிகளை துவைக்க அலுத்துக்கொண்டார்களே ஒழிய துணி துவைக்க ஒரு மெஷினை தரக்கூடாதா என்று எந்த நிறுவ னத்தையும் கேட்கவில்லை. ஆனால் அவர் படும் கஷ்டத்தை பார்த்த மார்க்கெட்டர், நேரமின்மை என்ற அவரின் தேவையைப் புரிந்து கொண்டு துணி துவைக்க மிஷின் இருந்தால் அவருக்கு உதவியாய் இருக்குமே என்று சிந்தித்ததன் விளைவு தான் வோஷிங் மெஷின் என்ற கண்டுபிடிப்பு. இதை வாடிக்கையாளர் கேட்கவில்லை. ஆனால் இனி இது இல்லாமல் வாடிக்கையாளரால் வாழ முடியவில்லை!

வாடிக்கையாளர் கூறுவதை கேட்பது இன்றியமையாததுதான் ஆன்ால் அது மட்டுமே முழுமையானதல்ல. என்ன வேண்டும் என்று கேட்கும்போது வாடிக்கையாளரால் அப்பொழுது அவர்கள் அறிவிற்கும், அனுபவத்துக்கும் உட்பட்டுத் தான் விடையளிக்க முடிகிறது. தங்கள் தேவைகளை உணர்ந்து அதற்கான தீர்வுகளை கற்பனை செய்து பார்க்கும் திறன் அவர்களிடம இல்லை. யோசித்து கூற நேரமும் பொறுமையும் கூட இருப்பதில்லை. அதனால்தான் என்ன வேண்டும் என்று கேட்கும் போது அவர்களால் 'விலை குறைவாக வேண்டும்' என்றோ 'புதியதாக எதையாவது தந்து தொலையுங்களேன்' என்றோ தான் கூற முடிகிறது.

நாம் அனைவரும் நம் அனுபவங்களால் கட்டுண்ட கைதிகள்' என்றார் அமெரிக்க பத்திரிக்கையாளர் எட்வர்ட் மர்ரோ.அதனால் தாம் உபயோகிக்கும் பொருள் இப்படித் தான் இருக்கும், இதைதான் செய்யும், இப்படி தான் செயல்படும் என்று அந்த சிறிய வட்டத்திற்குள் கட்டுண்டு கிடக்கிறார்கள். அதன் பிடியிலிருந்து உடைத்தெறிந்து தங்கள் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய பொருள் வேறு என்ன இருக்கலாம், எப்படி இருக்கலாம், வேறு எப்படி பயன்படலாம் என்று கற்பனை செய்ய வாடிக்கையாளர்களால் முடிவதில்லை.

உங்களிடம் இல்லாத பொருள் எது வேண்டும் என்று கேட்டால் வாடிக்கையாளர் எப்படி விடைய ளிப்பார்? இல்லாத ஒன்றை கற் பனை செய்து பார்ப்பது கடினம். ஆனால் அதுவே கையில் கொடுக்கப்படும் போது அட இதைத்தான் இத்தனை நாளாய் தேடிக் கொண்டிருந்தேன் என்பார் அதே வாடிக்கையாளர்.

(அடுத்த வாரம் தொடரும்)




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,217.72 | 6,169.57 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,524.4 | 3,508.4 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,874.044 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஏஐஏ இன்சுரன்ஸ்(349.00),சிங்கபுத்திர பினா (10.00), மஸ்கெலிய(8.30),நசனல் லங்கா(1.40),மல்ரி பினான்ஸ்(14.20).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ஆடாம் இன்வெஸ்மன்ட்(0.90), சுவர்ணமகால் பினா.(1.10), புளு டைமன்ட்ஸ் (X) (0.40), எஸ்எம்பி லீசிங்(0.60), புளு டைமன்ட்ஸ்(1.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 148.28 | 152.03 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 182.53 | 188.80 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 157.35 | 163.38 |
| சுவிஸ் பிராங் | 146.57 | 152.47 |
| கனேடிய டொலர் | 110.81 | 115.22 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.34 | 116.34 |
| சிங்கப்பூர் டொலர் | 103.66 | 107.47 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.20 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.87 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தொடரும் நீதிக்கான தேடல்...

இலங்கை இராணுவமானது பெரும்பான்மை சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுள்ளது. அத்துடன் இந்த இராணுவமானது தமிழ்ப் புலிகளை போரில் தோற்கடித்ததன் மூலம் சிங்கள மக்களின் பெரு மதிப்பைப் பெற்றுள்ளது. கொழும்பின் உயர்வர்க்க அரசியலானது போர்க்கால பொறுப்புக்கூறல் தொடர்பாக உண்மையில் பணியாற்ற விரும்பினாலும் கூட, சிங்கள மக்கள் மத்தியில் தனக்கெதிரான வெறுப்பைச் சம்பாதித்து விடக்கூடாது என்பதற்காகவே இதில் தயக்கம் காண்பித்து வருகிறது.

இவ்வாண்டு உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பெரும்பான்மை சமூகத்தின் அதிருப்திக்கு உள்ளாகிவிடக்கூடாது என்பதில் இலங்கை அரசாங்கம் உறுதியாக உள்ளது. இலங்கை அரசாங்கமானது பொறுப்புக்கூறல் நடவடிக்கையை முன்னெடுத்தால், அதனுடைய முக்கியத்துவம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கும்.

இதற்கும் அப்பால், இது ஒரு பலவீனமான அரசாங்கமாகும். சில் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்தே தற்போதைய தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி போன்ற முக்கிய இரு அரசியல் கட்சிகளும் இதில் அங்கம் வகிக்கின்றன. இந்நிலையில், பெரும்பான்மை சிங்கள மக்கள் விரும்பாத கோட்பாடுகளை அமுல்படுத்துவதில் அரசாங்கம் தயக்கம் காண்பிக்கிறது.

புதியதொரு அரசியல் சாசனம் ஒன்றை வரைவதற்கான தனது ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் மைத்திரிபால சிறிசேன' அரசாங்கம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வடக்கு ,கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு என்பது புதிய அரசியல் சாசனத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. இது இந்த நாட்டில் நிலையான சமாதானத்தை எட்டுவதற்கான சிறந்த வழிமுறையாக உள்ளது.

கெட்டவாய்ப்பாக, நிலையான சமாதானத்தின் அவசியமான ஒரு




கூறாக அரசியல் தீர்வு, விளங்கும் அதேவேளையில், இவ்வாறு கருதுவதானது தவறான ஒன்றாகக் காணப்படு கிறது. தவிர, அரசாங் கத்தின் அரசியல் சீர்திருத்த முயற்சிகள் மூலம் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டி நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப்பகிர்வு வழங்கப்படும் என எதிர்பார்க்க முடியாது.

இவை மிகவும் கடினமான விடயங்களாகும். இதனால் இலங்கையின் தற்போதைய அரசியலில் பல்வேறு பின்னடைவுகள் காணப்படுகின்றன. இவற்றுக்கப்பால், கொழும்பானது 2015 ஒக்டோபர் மனித உரிமைகள் பேரவையில் வழங்கிய வாக்கு றுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் காத்திரமான நகர்வுகளை முன்னெடுத்தால் அது வரவேற்கத்தக்கதாகும்.

அனைத்துலகப் பங்களிப்பை உள்ளடக்கிய இடைக்கால நீதிச்சேவை என்பது இந்த நாட்டிற்கு ஏன் முக்கியமானது என்பதை இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மக்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலம் இந்த முயற்சியை ஆரம்பிக்க முடியும். தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவித்தால் அது ஊக்கமளிக்கும் ஒரு செய்தியாக இருக்கும்.

அதேபோன்று வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் நிலங்களை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளித்தலும் நாட்டில் நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

இலங்கையின் இடைக்கால நீதித் திட்டங்கள் தொடர்பாகவும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் நிலைப்பாடு தொடர்பாகவும் அதிருப்தி காணப்படு கிறது. இவை தொடர்பாக தேசிய அரசாங்கம் மீளவும் ஆராய்ந்தால், நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை விரைவில் எட்ட முடியும். இவை மிகவும் வேகமாகவும் வினைத்திறனுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**ஆங்கிலத்தில் - Taylor Dibbert**
**வழிமூலம் - The diplomat**
**மொழியாக்கம் - நித்தியபாரதி**

# வெள்ளை அறிக்கையும் சீனா-இலங்கை உறவும்

மோதல் மற்றும் முரண்பாடுகள் அற்ற மற்றும் பரஸ்பர நலன் பயக்கும் ஒத்துழைப்பு போன்றவற்றைக் கட்டியெழுப்பும் விதமாக உலகின் அதிகாரத்துவம் மிக்க நர்டுகளுடன் உறவுகள் தொடர்பில் புதியதொரு மாதிரியைக் கட்டியெழுப்புவதற்கு சீனாவானது அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற ஆர்வங் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

சீனாவானது தனது முழுமையான மூலோபாய ஒத்துழைப்புக் கூட்டுப் பங்களிப்பை மேலும் ஆழமாக்குவதற்காக ரஷ்யாவுடனும், மிக நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக இந்தியாவுடனும் இணைந்து பணியாற்றுவது தொடர்பாகவும் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் ஜப்பானுடனான தனது உறவை முன்னேற்றுவதிலும் சீனா விருப்பங் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதிலும் சீனா தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதன்மூலம் இவ்விரு நாடுகளின் உறவு நிலையை வலுப்படுத்துவதுடன், முரண்பாடற்ற, மோதலற்ற, பரஸ்பர மதிப்பு மற்றும் பரஸ்பர நலன்பயக்கும் ஒத்துழைப்பு, இருதரப்பு, பிராந்திய, பூகோள விவகாரங்கள் மீதான ஒத்துழைப்பை அதிகரித்தல், பிரிவினைகளைக் கட்டுப்படுத்துதல், புதியதொரு ஆரம்ப முனையிலிருந்து மீண்டும் இருதரப்பு உறவைக் கட்டியெழுப்புதல், இதன் மூலம் இவ்விரு நாடுகளைச் சேர்ந்த மக்களும் உலகெங்கும் வாழும்



மக்களும் நலன்களைப் பெறுதல் போன்ற பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவின் புதிய நிர்வாகத்துடன் சீனா பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

சீன நாட்டை அபரிமிதமான வகையில் புதுப்பிக்கும் சீனாவின் கனவை உணர்த்துவதற்காக சீன மக்கள் மிகக் கடுமையாகப் பணியாற்றுகிறார்கள் என சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பிற்கான பாரிய வாய்ப்புக்களை சீனா கொண்டு வரும். சீனாவின் அபிவிருத்தியானது இந்த உலகின் சமாதானத்திற்கான ஒரு நினைவுச் சின்னமாக அமையும். அயல்நாடுகளுடன் நட்பைக் கட்டியெழுப்புதல் மற்றும் கூட்டுப்பங்களிப்பை உருவாக்குதல் போன்றவற்றுக்காக சீனா உறுதியாக உழைக்கும். இதன்மூலம் சீனாவானது சுமுகமான, பாதுகாப்பான, செழுமை மிக்க அயல்நாடுகளைக் கட்டியெழுப்பும்.

இப்பிராந்தியத்தைச் சேர்ந்த அனைத்து நாடுகளுடனும் பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கி, பாதுகாப்பு சார் உறுதியான மேலதிக கலந்துரையாடல்கள் மற்றும் ஒத்துழைப்பையும் உருவாக்கி, இந்தப் பிராந்தியத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்காக அனைத்துலக உறவுகள் தொடர்பான புதியதொரு மாதிரியையும் கட்டியெழுப்புவது தொடர்பில் அனைத்து நாடுகளுடனும் பணியாற்றுவதற்கு சீனா தயாராக உள்ளது என சீனாவால் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (முற்றும்)

**ஆங்கில மூலம் - The Sunday leader**
**வழிமூலம் - Easwaran Rutnam**
**மொழியாக்கம் - நித்தியபாரதி**

நம்பிக்கை எனும் கண்கொண்டு பார்க்க வேண்டு மானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும்.

~ ஃபிராங்ளின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி தமிழர்களுக்கு என்ன செய்வார்?

அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அதிர்ச்சி வெற்றி பெற்ற ட்ரம்ப், அமெரிக்காவின் ஜனாதிபதியாகக் கூடாது என அவரின் எதிர்ப்பாளர்கள் கர்ச்சித்தனர்.

இருந்தும் அவற்றையெல்லாம் வெற்றி கொண்டு அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் அவர்கள் பதவியேற்றுள்ளார்.

அமெரிக்காவின் .வரலாற்றில் ட்ரம்ப் அவர்களுக்கான தேர்தல் வெற்றி என்பது அமெரிக்க மக்களுக்குக்கூட அதிர்ச்சியைக் கொடுத்தது எனலாம்.

அந்தளவுக்கு அவர் மீது எதிர்ப்பிரசாரங்கள் நடந்தன. இந்நிலையில் அமெரிக்காவின் ஒரு வித்தியாசமான தலைவர் தான் என்பதை ட்ரம்ப் நிரூபிக்க வேண்டியவராக உள்ளார்.

இதற்காக. அவர் சர்வதேசத்தின் மீதான அமெரிக்காவின் பிடியை மேலும் வலுப்படுத்துவார் என எதிர்பார்க்க முடியும்.

இதனை உறுதி செய்வது போல அவர் பதவியேற்ற கையோடு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில்,

இஸ்லாமியப் பயங்கரவாதத்தை உலகிலிருந்து இல்லாது ஒழிப்பேன் என்று சபதம் செய்தார்.

ட்ரம்ப் அவர்களின் இச்சபதம் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமாவுக்கும் ஒரு அடி என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதாவது அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஒழிக்கவில்லை. அல்லது அதைச் செய்யவில்லை என்பது ஒரு பொருள்.

அதன் மறுபக்கப் பொருள்; பராக் ஒபாமா அடிப்படையில் இஸ்லாமியத் தந்தைக்கு மகனாகப் பிறந்தவர். எனவே அவர் இஸ்லாமியப் பயங்கரவாதத்தை ஒழிக்க விரும்பவில்லை என்பதாகவும் அமையலாம்.

எதுவாயினும் அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ட்ரம்பின் ஆட்சி அமைதியாக நகராது என்பது மட்டும் உண்மை.

அமெரிக்காவின் மிகச் சிறந்த தலைவராகத் தன்னை காட்டிக்கொள்ள ட்ரம்ப் முயற்சிப்பார். அந்த முயற்சி இஸ்லாமிய பயங்கரவாதத்தை உலகில் இருந்து ஒழிப்பது என்பதாக இருக்கும்.

இதன் பொருட்டு உலக நாடுகள் மீதும் அங்கு இருக்கக்கூடிய தீவிரவாத அமைப்புக்கள் மீதும் ட்ரம்ப் அதீத கவனம் செலுத்துவார்.

கூடவே உலக நாடுகளுடன் ஒத்திசைவான உறவை வளர்த்துக் கொள்வதில் அவர் நாட்டம் கொள்ளார். மாறாக உலகின் முதல் வல்லரசு அமெரிக்கா என்பதை நிரூபித்து அதனூடாக தன்னை ஒரு சிறந்த – வீரம் பொருந்திய அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாகக் காட்ட முற்படுவார்.

அவரின் இந்த இலக்குக்கு இயற்கையும் அமெரிக்க உளவுத்துறையும் எந்தளவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை, ஈழத் தமிழ் மக்களின் விடயத்தில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்பின் போக்கு எவ்வாறு அமையும் என்பதே எங்கள் கருசனையாக இருக்கும்.

இதன் அடிப்படையில் அமெரிக்காவில் இருக்கக்கூடிய தமிழ் அமைப்புக்கள் ட்ரம்பின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் இறங்க வேண்டும். யார் ஜனாதிபதியாக இருந்தாலும் அவரின் ஆதரவை எமக்காக்குவதே அமெரிக்கத் தமிழ் அமைப்புக்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

அவ்வாறு இருந்தால் மட்டுமே எங்களுக்கான அரசியல் தீர்வும் எங்களின் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும்.

# ஜனநாயகம், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன

### வெளிவிவகார அமைச்சர் மங்கள தெரிவிப்பு

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சுவீடனில் ஸ்ரொக்கொம் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி கொள்கை மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் விடயத்தை தெரிவித்தார்.

இலங்கையில் சமாதானம் மற்றும் மறுசீரமைப்பு செயற்பாடுகள் குறித்தும் இந்த பேச்சுவார்த்தையின் போது கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் மங்கள சமரவீர அங்குமேலும்உரையாற்றுகையில், தற்பொழுது நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகின்றது.

இதன் பலன்களை பொது மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். பொருளாதார பெறுபேறுகள் மூலம் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கும், அபிவிருத்திக்கும் இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்புக்களுக்கும் உதவ முடிந்துள்ளது.

சமாதானத்தின் பெறுபேறாக நாட்டின் அனைத்து இனத்தவர்களுக்கும் அதன் மூலமான நன்மைகளை அனுபவிக்க முடிந்துள்ளது. இலங்கை இந்து சமுத்திரத்தில் வர்த்தக மற்றும் பொருளாதார மத்திய நிலையமாக மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

இலங்கை நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்காக காட்டிவரும் அர்ப்பணிப்பு, நல்லாட்சி மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக விரைவில் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்குவதற்கு ஐரோப்பிய பாராளுமன்றமும், ஒன்றியமும் சிபார்சு செய்துள்ளன.

இலங்கை இந்து சமுத்திரத்தில் வர்த்தகம் மற்றும் பொருளாதார மத்திய நிலையமாக மேம்படுத்துவதற்கான அடிப்படை கொழும்பு சர்வதேச நிதி நகரத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனறும் அமைச்சர் தெரிவித்தார்

இதற்காக அம்பாந்தோட்டை, கொழும்பு கிழக்கு மற்றும் திருகோணமலை அபிவிருத்தி நடவடிக்கைகளும், பலாலி விமான நிலைய அபிவிருத்தியும் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டளவில் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை பாரிய வளர்ச்சிக்கான பரிமாற்றத்தை பெற்றுள்ளது. இதனால், முன்னரிலும் பார்க்க இன்று சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும், நட்புறவும் அவசியமாகும் என்றும் அமைச்சர இங்கு சுட்டிக்காட்டினார். (இ-3)

## ஐ.தே.கவுடன் சு.க. உள்ளவரை இணைவது சாத்தியமாகாது

### பிரசன்ன எம்.பி. கூறுகிறார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும் பான்மையானவர்கள் மகிந்த ராஜபக்ஷவுடன்தான் இருக்கின்றார்கள் என்பதை நேற்று இடம்பெற்ற சந்திப் பின் போது மாகாண முதலமைச்சர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன்மாகாண முதலமைச்சர்கள் நேற்றுக் காலை நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மகிந்த ராஜபக்ஷவின் உத்தி யோக பூர்வ வாசஸ்தலத்தில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலில் மகந்த ராஜபக்ஷவின் குழு சார்பாக பிரசன்ன ரணதுங்க, மஹிந்த யாப்பா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வந்து சேருங்கள் என்ற வார்த்தையுடன்தான் முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டியிருக்கும் வரையில் கூட்டுச் சேர்தல் என்பது சாத்தியமற்றது என தாம் அவர்களிடம் தெரிவத்ததாகவும் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-3)

## எப்.சி.ஐ.டி. விசாரணைக்கு எதிர்ப்பு

நாடாளுமன்ற கோப் குழுவினால் நிதிமுறைக்கேடு தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட அரச நிறுவனங்கள் தொடர்பில் நிதி மோசடிகளுக்கு எதிரான பொலிஸ் பிரிவு விசாரணை நடத்து வதை ஐக்கிய தேசியக்கட்சி .யின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி கோப் குழு நாடாளுமன்றத்தில் முன்வைத்த அறிக்கையின் படி 19 அரச நிறுவனங்கள் மீது நிதிமுறைக்கேடு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில். குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

மேலும். விசாரணைகள் மத்திய வங்கியின் முறிகள் தொடர்பில் இடம்பெற்ற விசாரணைகளை போன்று நடத்தப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்சன ராஜகருண நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் கிராமம், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை, செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம்இலங்கைதொலைத் தொடர்பு நிலையம், வலயம் 6 ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சாஸ்திரங்கள்

✦ குளிக்கப்போகும்போது சாப்பாட்டை நினைத்துக் கொண்டு வேறுவழியே திரும்பிச் செல்பவன் மிகப் பெரிய குற்றத்தைச் செய்தவனாகின்றான். அவன் நரக வாசத்தை அனுபவிக்க நேரிடும்.

- பத்மபுராணம்

✦ கறுப்பு, சிவப்பு ஆகிய நூல்களுக்கு பில்லி, சூன்யத்தை போக்கும் சக்தியுழ் விபத்துக்களைத் தடுக்கும் சக்தியும் உண்டு. நீண்ட தூரப் பிரயாணமாக சொந்தவண்டியில் செல்பவர்கள் புறப்படும் முன்னர் வண்டியின் வலது சக்கரத்தின்கீழ் கறுப்பு நூல்களையும் இடது சக்கரத்தின்கீழ் சிவப்பு நூல்களையும் போட்டு வண்டிச்சக்கரம் அந்தநூல் மீது படும்படி புறப்பட்டுச் செல்லவேண்டும். இதனால் சுகப் பிரயாணமும் விபத்தில்லா பிரயாணமும் அமையும்.

-நாற்பது சமஸ்காரங்கள்

✦ விஷ்ணு பகவானுக்கு சங்கினால் நீர்வார்த்து அபிஷே கம் செய்வது மிகவும் புண்ணிய காரியம். ஆனால் பூஜைக்காக சுத்தம் செய்யப்பட்ட சங்கை பூஜை முடிகிற வரையில் தரைமேல் வைக்கக்கூடாது. அப்படி வைக்க நேர்ந்தால் பலமுறை நீரில் தோய்த்து சுத்தம் செய்ய வேண்டும்.

-பத்மபுராணம்

✦ தளிப்பதற்காக நதி அல்லது குளக்கரைக்குச் செல்பவன் குளிக்காமல் வீடு திரும்பக் கூடாது. அது குற்றமாகும்.

- பத்மபுராணம

✦ வீதிவழி போகும் போது மண்மேடு, பசு, நெய்குடம், தேன்குடம், நாற்சந்தி, அரச மரம், பிராமணன் முதலியன எதிர்ப்பட நேரிட்டால் அவைகளை பிரதட்சணமாக (வலது புறமாக) கடந்து போக வேண்டும்.

-கிருஹஸ்த தர்மம்

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### கலாசாரம்



நம்மொழியில்"கலாசாரம்" (Culture) என்ற வார்த்தை இருக்கிறதே அது "கலை" "ஆச்சாரம்" என்ற இரண்டு சொற்கள் இணைந்து உருவான கூட்டுச் சொல் (Compound-word). இதில் "கலை" என்ற வார்த்தை எப்படி வந்தது என்றால் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக அறிவின் நுட்பத்தினாலே, கைத்தினாலேயே உருமாற்றி, அழகுபடுத்தி நாம் துய்க்கிறோம் பாருங்கள். அதுதான் கலை.

ஆக மனிதன் வாழ்வே கலைதான். அப்படி இந்தக் கலையின் காரணமாக விளைவு தனக்கோ, பிறர்க்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவுக்கோ, உடல் உணர்ச்சிகளுக்கோ துன்பம் எழாது விழிப்போடு இருந்து கொண்டு, அளவோடு, முறையோடு கலையை நாம் பழகி வந்தோமானால், அந்த நெறியின் பெயரே "ஆச்சாரம்" துன்பம் எழாமல் காக்கக் கூடிய ஒரு நெறி, ஒரு முறை, ஒரு அளவு, இது எல்லாம் பார்த்தோமானால், அதன் பெயர் ஆச்சாரம் என்று சொல்லுவார்கள். அதனால் கலை + ஆச்சாரம் = கலாசாரம் என்றானது.

ஆங்கிலேயர்கள் நமது நாட்டுக்கு வந்த போது பார்த்தார்கள் நல்ல அழகான சொல்லாக இருக்கிறது, நாமும் உச்சரிக்கலாம் என்று எடுத்தவர்கள், இடையிலேயுள்ள நெடிலை விட்டுவிட்டு "Culture" என்று தங்கள் அகராதிக்கு எடுத்துச் சென்றார்கள். "கலாசாரம்" என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு பார்த்தோமானால் எப்பொழுதுமே இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றி, அறிவினாலோ, கைத்திறனாலோ, உருமாற்றி அழகுபடுத்தியே துய்த்து வாழக் கூடியவர்களாகவே நாம் இருக்கிறோம்.

## தர்சன், ரகுவரன், தீபன் அசத்தல்

# கிளிநொச்சி தருமபுரம் இளம்தளிரை வீழ்த்தி மைக்கல் அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி



கரவெட்டி மத்தோனி விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் மின்னொளியிலான அணிக்கு 6 ஓவர் 9 பேர் கொண்ட கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கிளிநொச்சி தருமபுரம் இளம்தளிர் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இளம்தளிர் அணி 6 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றது.

மைக்கல் அணியின் பந்து வீச்சு சார்பில் தினோஜன், தர்சன், பிரசாந் ஆகியோர் தலா 2, இளம் வீரர் தீபன் ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி விக்கெட் இழப்பின்றி வெற்றிபெற்றது. இதில் ரகுவரன் 12, தர்சன் 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

மாலுசந்தி மைக்கல் அணி அடுத்தசுற்றுப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தின் முன்னணி அணிகளுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# சென்ஜோன்ஸ்-கொழும்பு கெரிக் கல்லூரி சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி சமநிலையில்

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு கெரிக் கல்லூரிக்கும் இடையிலான 19 வயதுக்குட்பட்ட சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

கடந்த இரண்டு நாட்களாக யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடம் பெற்றது.

இதில் முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு கெரிக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் துசாநந்தா 42 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பாக யதுசன் 4 விக்கெட்டுக்களையும் கபில்ராஜ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 267 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் கிசாந்துஜன் 97 ஓட்டங்களையும் தேவபிரசாத் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

தனது இரண்டாம் இனிங்சை ஆரம்பித்த கொழும்பு கெரிக் கல்லூரி ஆட்டநேர முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சந்தன காரகே 52 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கபில்ராஜ் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்


# தேசிய சாதனையாளர்கள் கௌரவிக்கும் நிகழ்வு



கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் 2016 இல் தேசிய மட்டத்தில் மேசை பந்தாட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற மாணவி பாலகிருஸ்ணன் தனுசியா , தேசிய மட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற ரசீந்திரன் தமிழ்மகள் மற்றும் கோலூன்றிப் பாய்தலில் வெண்கலப் பதக்கம் வென்ற யோநாதன் சுகிர்தா ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சத்தியசீலன் கலந்து சிறப்பித்திருந்தார். (க-312)

## கவணர்ஸ் வெற்றிக் கிண்ணம்

# சென்றலைட்ஸ் 2 ஆவது வெற்றி



ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் டொமஸ்ரிக் பிரிவினரால் மாகாணங்களில் முதலாவது அணியாக திகழுகின்ற அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி கண்டி யுத் சி.சி. அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி யுத் சி.சி. அணி 44.3 ஓவர்களில் 136 ஓட்டங்களைப் பெற்றது. குமணசிறி 33 ஓட்டங்களைப் பெற்றார். வதுணன் 2 இலக்குகளையும் தர்ஸன் 3 இலக்குகளையும் எரிக்துணான் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 26 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றனர். செல்ரன் 32, ஜனோசன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றனர். அபயக்கோன் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

இத் தொடரில் சென்றலைட்ஸ் அணி 3 போட்டிகளில் 2 போட்டியில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# FA கிண்ண உதைபந்தாட்ட போட்டி நாவாந்துறை சென்.மேரிஸ் வெற்றி



FA கிண்ண உதைபந்தாட்டப போட்டியில் 20.01.2017 அன்று அரியாலை உதைபந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் சென்.மேரிஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் சிறப்பான வெற்றியை தனதாக்கிக் கொண்டது சென்.மேரிஸ் அணி சார்பாக நிதர்சன், 4 நிரோஜன் 1 கோல் போட்டனர். (க)



*11ஆவது வடமாகாண ரீதியான குத்துச் சண்டைப் போட்டியில் 4 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று 27.5 புள்ளிகளுடன் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டம் பெற்றுக் கொண்டது. இரண்டாம் இடத்தினை யாழ். மாவட்டமும் மூன்றாம் இடத்தினை வவுனியா மாவட்டமும் முறையே 25, 19.5 எனும் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டன. வெற்றி பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அணியினரை படத்தில் காணலாம். (படம்:-மல்லாவி செய்தியாளர்)*

## முன்னாள் போராளி...

பணியாற்றி வந்த இவர் கடந்த வாரம் 13 ஆம் திகதி வெளியில் சென்றிருந்தபோது பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக பின்னர் அறியக்கிடைத்துள்ளது.

அவர் தற்போது வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் உறவினர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதேவேளை கடந்த சில நாட்களுக்கு முன்னரும் இதே திருவையாறு பகுதியில் வசிக்கும் முன்னாள் போராளியான முருகையா தவவேந்தன் என்பவர் நள்ளிரவு வேளையில் வீட்டிற்குள் புகுந்து கைது செய்யப்பட்டார். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதி யுத்தத்தின் பின்னர் அரசாங்கத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டு வாழ்ந்து வரும் முன்னாள் போராளிகள் இவ்வாறு மீண்டும் இலக்கு வைக்கப்படுவது குறித்து முன்னாள் போராளிகள் மத்தியில் பெரும் பதட்டமான நிலை நிலவிவருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (செ-281)

## உலகத் தமிழர்...

பூமிக்கு மழையை வழங்குவதற்கு உதவுகின்ற சூரிய பகவானை துதிப்பதற்கும், முற்றி விளைந்த நெற் கதிர்களை பெற்றுக்கொள்வதற்கு உதவிய உழவர்களைப் பாராட்டுவதற்கும், உழவுத் தொழிலுக்கு உதவிய எருதுகளை வணங்கித் தட்டிக் கொடுப்பதற்கும் ஏற்ற ஒரு தமிழர் திருநாளாக தைப்பொங்கல் இருந்து வருகின்றது.

தைப்பொங்கல் என்பது ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களுக்கே உரியதொரு கொண்டாட்டம் என்பது போய் முழுத்தமிழ் இனத்தையும் ஒற்றுமைப்படுத்தி ஒன்றாகச் சேர்த்து கொண்டாட் வழிவகுக்கும் ஒரு விழாவாக மாறியுள்ளது. அத்துடன் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஏன் இஸ்லாமியர் கூட தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றார்கள்.

இவ்வாறான தைப்பொங்கல் கொண்டாட்டம் முழுத்தமிழ் இனத்தையே சேர்க்க வல்லதாக இருக்கும் போது சகல நாடுகளிலும் உள்ள தமிழ்ப் பேசும் மக்களும் தமக்குள் ஒற்றுமையை வரவழைக்க, வளர்க்க தைப்பொங்கலை மையமாகக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கருதுகின்றேன்.

எவ்வாறு நாங்கள் நான்கைந்து கட்சிகளைச் சேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமைத்தோமோ அதேபோல் உலகம் பூராகவும் உள்ள தமிழ்ப் பேசும் மக்கள் சேர்ந்து தமிழ் அகில உலகக் கூட்டமைப்பொன்றை உருவாக்கும் காலம் தற்போது கனிந்துள்ளது. இறைவன் அருளால் அவ்வாறான அமைப்பொன்று உருவாக வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

சாதி, மத, வர்க்க பேதமின்றி நாடுகள் கடந்து எம் மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் எமது குறைகளை உலகுக்கு எடுத்துக் கூற வேண்டும். அதற்குத் தைப்பொங்கல் மையமாக அமையட்டும்.

தைத் திருநாளில் தைப்பொங்கல் நிகழ்வுகளுடன் மேலதிகமாக தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளாக ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவல், உறியடித்தல், பட்டம் ஏற்றும் போட்டிகள் என பலதரப்பட்ட போட்டிகளிலும் மக்கள் ஈடுபடுவார்கள்

இந்த வகையில் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையை உடைய தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவது எமக்கு மகிழ்வைத் தருகின்றது. எமது படித்த வாலிபர்கள் பலர் விவசாயத்தில் ஈடுபட வேண்டும். நவீன தொழில்நுட்ப அறிவுடன் விவசாயத்தில் தன்னிறைவைக் காண எமது படித்த வாலிபர்கள் முன்வரவேண்டும்.

தமிழ் மக்கள் விவசாயத்தின்பால் கொண்டுள்ள நாட்டத்தையும் விவசாயத்தின் மூலம் அவர்கள் பெற்றுக் கொள்கின்ற நன்மைகளையும் கண்ணுற்ற பலர் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை கையகப்படுத்துவதில் குறியாக இருக்கின்றார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. விரைவில் இவ்வாறு கையகப்படுத்தியுள்ளவர்கள் தாம் குடியேறி இருக்கும் காணிகளை மக்களிடம் திரும்பக் கையளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

எது எவ்வாறு இருப்பினும் எமது மக்களின் விவசாய நிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எமது தரிசு நிலங்களில் ஒரு சிறு பகுதிகூட விவசாய முயற்சிகளுக்கு பயன்படுத்தாது எஞ்சியிருக்கக் கூடாது. ஏதாவது காரணங்களால் சில நிலங்களில் விவசாய நடவடிக்கைகள் தொடர முடியாத விடத்து அக் காணிகளை தற்காலிகமாகவேனும் விவசாய அமைச்சு பொறுப்பேற்று அந் நிலங்களில் தோதான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் எமது உற்பத்திகள் அதிகரிப்பதுடன் நிலங்களும் பாதுகாக்கப்படும்.

எவ்வாறு மழைநீர் ஒருதுளி கூட கடலை அடையாது சேமிக்கப்பட வேண்டுமோ தரிசு நலங்களும் உரியவாறு பயன்படுத்தாமல்வைத திருக்கப்படாது நாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-4,9)

## ஜல்லிக்கட்டு...

இந்திய ஊடகமான த டைம்ஸ் ஒப் இந்தியா வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக அமைச்சர்களான விஜயபாஸ்கர் மற்றும் பாண்டியராஜன் ஆகியோரின் முன்னிலையில் நேற்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டம், ராப்பூசல் கிராமத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் இடம்பெற்றன.

இந்த போட்டியின் போதே குறித்த இருவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இதில் காயமடைந்தவர்கள் புதுக்கோட்டை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள தமிழ் நாடு கல்வித்துறை அமைச்சர் பாண்டியராஜன்,

ராப்பூசல் கிராமத்தில் தாம் நேற்று ஆரம்பித்து வைத்துள்ள ஜல்லிக்கட்டு போட்டியில் துரதிர்ஷ்டவசமாக பலர் காயமடைந்துள்ளனர். எனினும், மாடுகளுக்கு எந்த துன்புறுத்தல்களும் இடம்பெறவில்லை.

குறித்த போட்டியின் போது இருவர் உயிரிழந்துள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எனினும், இருவர் படுகாயமடைந்து உயிருக்கு போராடிக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய போட்டிகளுக்கு சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும், முதலுதவி வசதிகளும் சிறப்பாகவே செயல்பட்டதாகவும் அமைச்சர் பாண்டியராஜன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த சில ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த சில வாரங்களாக குறித்த தடையை நீக்க கோரி தமிழகம் முழுவதும் போராட்டம் வெடித்திருந்தது.

குறித்து போராட்டங்களுக்கு தமிழர்கள் வாழும் நாடுகளில் ஆதரவு பெருகி வந்த நிலையில், நேற்றுமுன் தினம் ஜல்லிக்கட்டு போட்டிக்கு விதிக்கப்பட்டிருந்த தடைக்கு எதிராக அவசர சட்டம் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஜி.எஸ்.பி சலுகை...

காரணத்தினால் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைத் திட்டம் கிடைக்கவில்லை.

'அவர்களின் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தால் எவ்வித பிரச்சினையும் இன்றி வரிச் சலுகைத் திட்டம் கிடைத்திருக்கும்.

எனினும் அன்று ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கிடைக்காத காரணத்தினால் நாட்டுக்கு ஐந்து சதமேனும் நட்டம் ஏற்படவில்லை.

அந்த சலுகைத் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள தற்போதைய அரசாங்கம் நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கின்றது.

அரசாங்கம் நாட்டின் அனைத்து சொத்துக்களையும் விற்பனை செய்து, பிரிவினை வாதத்தை போஷித்து வருகின்றது. அரசாங்கம் சமஷ்டி ஆட்சி முறையை கொண்டு வர முயற்சிக்கின்றது. 2004ம் ஆண்டில் ஜே.வி.பியுடன் அலரி மாளிகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பின்னர் ஜே.வி.பி. யானைக் குட்டியை செல்லம் கொஞ்ச சென்றுவிட்டது. விமல் வீரவன்ச எமது இதயத்தைப் புரிந்து கொண்டு தொடர்ச்சியாக எம்முடன் இருந்தார். இன்று வெட்கமின்றி அரசாங்கம் செய்யும் வேலைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியுள்ளது.

மேலும் நாட்டில் பல பிரச்சினைகள் இருந்தாலும் ஓரினச் சேர்க்கையாளர் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.(செ-11)

## வான்பரப்பில்...

எனினும், தொலைகாட்டிப் பதிவில், சதுர வடிவமான பொருள் நகர்வது அவதானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு 7.15 மணியளவில் இந்த மர்மப் பொருள் வானில் பறந்து சென்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. (செ-11)



ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹயஸ் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து நேற்றையதினம் பண்ணைக் கடற்கரையில் குடை சாய்ந்தது. இதில் வாகனத்திற்கு பகுதியளவிலான சேதம் ஏற்பட்டிருந்த போதிலும் வாகனத்தில் பயணம் செய்தவர்களுக்கு தெய்வாதீனமாக உயிர்ச் சேதம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

## "இவர் இல்லாமல்...

மெரினா கடற்கரையில் நிகழ்ந்த சுவாரஷ்யமான சம்பவம் ஒன்று சமூக வலைதளங்களில் பிரபல்யமாக பார்க்கப்படுகின்றது.

மெரினா கடற்கரையோரத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் போது பெண்ணொருவர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்துடன் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவர் இவரின் உருவப்படத்துடன் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் ஏன் கலந்து கொள்கிறீர்கள் என கேள்வியெழுப்பியுள்ளார். இதற்கு குறித்த பெண் இவர் இல்லாமல் தமிழருக்கு உணர்வு எப்படி வரும் என பதிலளித்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பெண் பிரபாகரனின் உருவப்படத்தை தாங்கியவாறு எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக அதிகம் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஐ.தே.கவிற்கு எதிரான...

கொழும்பிலுள்ள தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் வைத்து மாகாண முதலமைச்சர்களுடனான சந்திப்பை அடுத்து அவர் இந்த கருத்தை நேற்று வெளியிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர்களை தவிர்ந்த ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு மாகாண முதலமைச்சர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்துள்ளனர்.

கொழும்பு விஜயராம மாவத்தையிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், வட மத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன, இந்த சந்திப்பில் பங்கேற்கவில்லை.

முதலமைச்சர்களுடனான இந்த சந்திப்பில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பந்துல குணவர்தன, காமினி லொக்குகே, ஜோன்சன் பெர்ணாண்டோ மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

இந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த ஊடகவியலாளர்கள், இரண்டு வருடங்களின் பின்னர் தற்போதே முதலமைச்சர்களுக்கு உங்களை சந்திப்பதற்கு காலம் தாழ்த்தி வந்துள்ளார். இது பற்றி உங்களுடைய கருத்து என்ன என வினாவினார்.

இதற்கு பதில் அளித்த மகிந்த ராஜபக்ஷ, அதுவே' பெரும்பான்மை மக்களின் எண்ணம். நாட்டு மக்களின் எணணமும் அதுவே. அவர் களின் தேவைக்காக முதலமைச்சர்கள் என்னை சந்திக்கவில்லை. கட்சித் தலைவரின் அனுமதியுடனேயே மாகாண முதலமைச்சர்கள் என்னை சந்தித்தனர். அவர்க ளின் தேவைக்காகவே இந்த பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கலாம். எனினும் ஜனாதிபதியின் அனுமதியை பெற்றறே வந்திருக்கின்றனர்.

பேச்சுவார்த்தை நிறைவுபெறவில்லை. நாம் மிகத் தெளிவாக இருக்கின்றோம். ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தை வைத்துக்கொண்டு இதனை எவ்வாறு செய்வது. ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான எந்தவொரு முன்னணியுடனும் பேச்சுவார்த்தை நடத்த நான் தயார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான முன்னணியுடன் தான் நான் செல்ல முடியும். அந்த அணி நீண்டகாலமாவதற்கு முன்னர் உருவாக்கப்படும். உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. பொது எதிரணியின் 27ஆம் திகதி நடைபெறும் பேரணியும் மிகவும் வெற்றிகரமாக அமையும் என மகிந்த குறிப்பிட்டிருந்தார்.

இந்த சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்படாத போதிலும் வெற்றிகரமாக அமைந்ததாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க குறிப்பிட்டார்.

எந்த விடயங்கள் என்பதை விட, தீர்க்கமான முறையில் நாம் கலந்துரையாடி னோம். இருதரப்பும் அதிகளவில் கருத்துக்களை பரிமாறிக்கொண்டோம். வாக்குவாதம் இருந்தது. தர்க்கங்கள் இருந்தது. இன்றுடன் (நேற்றுடன்) இந்தப் பேச்சுவார்த்தை நிறைவு பெறவில்லை.

தற்போது நாம் இணக்கப்பாட்டிற்கு வரவில்லை. எனினும் இறுதியில் மகிழ்ச்சிகரமான சந்திப்பாக இது அமைந்தது. தற்போதுள்ள சூழ்நிலைகள் குறித்து இரதரப்பு சார்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதற்கான பதில்களையும் மகிந்த ராஜபக்ஷ வழங்கினார். எதிர்வரும் தேர்தலை இலக்காக கொண்டு இந்த சந்திப்பை நடத்தவில்லை.

தற்போதுள்ள அரசியல் சூழல் தொடர்பிலும் இருதரப்பிலும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தை வெற்றி அளித்துள்ளது. இணக்கப்பாடு ஏற்பாடாத போதிலும் எதிர்கால பேச்சுவார்த் தைக்கு ஒர் ஆரம்பத்தை நாம் இன்று (நேற்று) இட்டுள்ளோம் என சரத் ஏக்க நாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

*(முன்னர் கிடைத்த செய்தி 3ஆம் பக்கத்தில்)*

## யாழிலிருந்து...

வருகிறோம் என்று யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் அந்த ஊடகத்துக்கு வழங்கிய ஒரு பகுதி வருமாறு,

கேள்வி - தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் யாழ்.குடாநாட்டில் பெரும் தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த எண்ணிக்கை குறைககப்பட வேண்டும் எனவும் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். நீங்கள் யாழ்.குடாநாட்டில் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் அங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைத்துள்ளீர்களா?

பதில்-நாங்கள் யாழ்.குடாநாட்டில் இராணுவம் நிலைகொண்டுள்ள பிரதேசங்களைக குறைத்து வருகின்றோம். இராணுவத்தினரின் எண்ணிக்கையை அல்ல. இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டிய காலம் இன்னும் வரவில்லை.

இதற்கு காரணம் சமீபத்தில் ஆவா குழு என்றொரு வன்முறைக்குழு உருவாகியது. இதுபோன்ற குழுக்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பட்சத்தில் அவற்றைக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

இதேவேளை முன்னாள் புலி உறுப்பினர்கள் 2963 பேர் யாழ்.குடாநாட்டில் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள். புனர்வாழ்வுக்கு உட்படாத 300க்கும் அதிகமான முன்னாள் புலி உறுப்பினர்களை நாங்கள் இனம்கண்டுள்ளோம்.

இந்தியா, பிரான்ஸ், லண்டன் ஆகிய நாடுகளிலிருந்து இவர்களை மீண்டும் பயங்கரவாதத்தில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நிதி அனுப்பும் சூழ்நிலையும் இன்னும் இருக்கின்றது.

புலம்பெயர் அமைப்புகளுடன் முன்னாள் புலி உறுப்பினர்கள் தொடர்பு வைத்திருப்பதும எமக்குத் தெரியும். எனவே இவர்கள் மீண்டும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடாமல் கண்காணிப்பதும் எமது பொறுப்பாகும்.

கேள்வி-அப்படியாயின் யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு முடியாது என்கின்றீர்களா?

பதில்-இப்போது குறைக்க முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது. இருந்தும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள காணிகளை படிப்படியாக மீள ஒப்படைத்து வருகின் றோம் என யாழ்.கட்டளைத் தளபதி தனது செவ்வியின் ஒரு பகுதியில் குறிப்பிட்டிருந்தார்.(செ-11)

# உவர்நீரை நன்னீ...

இலங்கை கடற்படையினரால் 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட உவர் நீரை நன்னீராக்கும் இயந்திர தொகுதியானது கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேயகுணரட்னவினால நேற்றைய தினம் எழுவைதீவு மற்றும் நயீனாதீவு பகுதிகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட தீவுகளில் ஒன்றான எழுவைதீவுக்கான இறங்குதுறை அமைப்பதற்காக மீள்குடியேற்ற அமைச்சினால் 7.3 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதன்படி இவ் இறங்குதுறை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை பொறுபேற்றுக்கொண்ட இலங்கை கடற்படையானது அவ் வேலையை ஊழிய செலவின்றி தாமே அதனை அமைத்துக்கொடுத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த இறங்குதுறை அமைப்பதற்காக ஊழியர்களுக்கான செலவீனமாக மீள்குடியேற்ற அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியுடன் கடற்படையினரின் மேலதிக நிதியையும் சேர்த்து கடற்படையானது எழுவைதீவு மற்றும் நயீனாதீவு ஆகிய தீவுகளில் ஒவ்வொரு இயந்திர தொகுதியையும் 15இலட்சம் ரூபாய் செலவில் மக்களது பயன்பாட்டுக்காக உவர் நீரை நன்னீராக்கும் இயந்திர தொகுதியை அமைத்துக்கொடுத்திருந்தது.

உவர் நீரை நன்னீராக்கும் இயந்திர தொகுதி அமைக்கும் கடற்படையின் வேலைத்திட்டமானது நாடளாவிய ரீதியில் 107 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் யாழ் மாவட்டத்தில் ஜந்து இடங்களில் இவ்இயந்திர தொகுதியானது அமைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் யாழ்.போதனா வைத்திய சாலை. யாழ்.பல்கலைகழகம், யாழ். பொலிஸ நிலையம் மற்றும் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்ட இரண்டு தீவுகளிலுமாக மொத்தம் ஜந்து இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட இவ்இயந்திர தொகுதிகளானது வடமாகாணத்தில் ஏனைய இடங்களிலும் அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இச்செயற்திட்டத்திற்கு பொறுப்பான கடற்படை பொறியலாளர் தெரிவித்திருந்தார்.(செ-4)


**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண்.மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



**கனடாவில் உயர்கல்வி**

A/L சித்திபெய்தி விட்டீர்களா? குறைந்தளவு கட்டணத்துடன் கனடாவில் (வெளிநாட்டில்) படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற ஆசையா? இன்றே. இப்பொழுதே தெளிவாக திட்டமிடுங்கள் காலத்தினை,பணத்தினை வீரையமாக்காது உடனடியாக எம்மை நாடுங்கள். எம்மிடம் வருபவருக்கு பிரத்தியேகமான தனித்துவமான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி, குடியேற்ற ஆலோசகர்கள்

V4 EDUCATIONAL CONSULTANCY

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226236



**15ஆவது ஆண்டு நினைவு**



அமரர். ஸ்ரீமான் வாதவூர் தவச்செல்வம் JP
(சிற்பனை, வேலணை)
தோற்றம் : 15.12.1943 - மறைவு : 07.02.2002

எங்கள் இதயத்தில் வாழும் தெய்வமே!
என்றும் உங்களை மறவோம்!

உங்கள் புனித ஆத்மா
இறைவனின் திருவடிகளில்
நித்திய பேரின்பம் பெற்று
வானுலகில் இருந்து எங்களை
ஆசிக்க வேண்டுகின்றோம்.

21/ 3A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

-குடும்பத்தினர்


# இளைஞர்களிடை...

ட்டு அது கைகலப்பாக மாற்றமடைந்துள்ளது.

இதனை தொடர்ந்து சில இளைஞர்கள் தம்மோடு முரண்பட்டுக்கொண்ட ஏனைய இளைஞர்களது வீட்டிற்கு சென்று அவர்களது வீட்டின் மீது தாக்குதல் நடத்தியிருந்ததுடன் வீடுகளில் இருந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்கள்.

இத்தாக்குதல் சம்பவமானது சுமார் ஜந்து வீடுகளின் மீது நடத்தப்பட்டிருந்ததுடன் அதில் ஒருவீட்டில் நோய்வாய்ப்பட்டு அதற்கான சிகிச்சையை பெற்று வைத்தியசாலையில் வீடு திரும்பியிருந்தவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக குறித்த நோயாளி உட்பட மூன்று பேர் இத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன் வீடுகளில் காணப்பட்ட தொலைக்காட்சி பெட்டிகள் கணனிகள் போன்றனவும் தாக்குதலின் போது சேதமாக்கப்பட்டுள்ளது.

மேலும் படுகாயமடைந்த மூன்று பேரும் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

# பனையுடன் மோதி பேருந்து விப...



த்தீவுச் சாலைக்குச் சொந்தமான பேருந்து பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்ட நால்வரும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற விவசாயக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக சென்றவர்கள் பயணித்த பேருந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் பேருந்தின் நடத்துநரான ஜீ.கிறேஸ்குமார் (வயது - 25) உட்பட பயணிகள் நான்கு பேர் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு முல்லைத் தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்ததும் விரைந்த சென்ற முள்ளியவளைப் போக்குவரத்துப் பொலிஸார் விபத்துக்குள்ளான பேருந்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-15-281)


**வீட்டுப் பராமரிப்பாளர் தேவை**

சுன்னாகத்தில் வீட்டுப் பராமரிப்பாளர் (ஆண்) உடன் தேவை. மும்மொழிகளும் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது. தங்குமிடம் உணவு வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்பு :
076 372 4126



**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்



ALL LAPTOPS, DESKTOP, MOTHER BOARD REPAIR & SERVICE

**NORTH LEAD COMPUTER SALES & SERVICE**
**NORTH LEAD CCTV CAMERA & SECURITY SYSTEM**
DEALERS IN QUALITY COMPUTER, LAPTOP ACCESSORIES & CCTV CAMERA ITEMS

QUICK REPAIR AND SERVICE QUICK PICK-UP AND DELEVERY

கணனிகள், கண்காணிப்பு கமராக்களின் அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

LAPTOP COMPUTER ACCESSORIES FOR SALES

Keyboard From: 1850
Battery From: 3850
Charger From: 1800
LED Screen From: 8700
Lap Hard Disk From: 6950
Lap DVD From: 2850

CCTV CAMERA AND ACCESSORIES FOR SALES

Indoor Camera From: 3450
Outoor Camera From: 3850
Wireless Camera From: 8500
DVR From: 7400
04 Chanel Wifi Set From: 37500

DESKTOP COMPUTER ACCESSORIES FOR SALES

Processor From: 8950
Motherboard From: 5750
Ram From: 2600
DVD Writer From: 2550
Hard Disk From: 6350
ATX Casing From: 2750
LED Monitor From: 11400
Laser Printer From: 16900
Scanner From: 8500
Ext.Dvd Writer From: 3800
UPS From: 4150

North Lead Computer Sales & Service : No : 06A, Sirampiyadi Lane, Stanley Road, Jaffna (Near to Hero Service & Sathosa)
Tel : 021-222 4459, Fax : 021-221 6980, Mob : 0772533390, Hotline : 0774192275





இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.